# இக்பால் இலக்கியமும் வாழ்வும்

தமிழாக்கம்

த. கோவேந்தன்

விற்பனை உரிமை:

தமிழ்மணிப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை

சென்னை-5.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

வானவில் வண்ணப் பணிமனை வெளியீடு எண்-1

முதற் பதிப்பு: 21-1-1977.

உரிமை: தங்கவேல் கோவேந்தன் (1932)

விலை ரூ. 5

**Iqbal life and Literature.**


Transcreated into Tamil

By T. KOVENDAN.

(Soviet Land Award winner.)

---

அச்சிட்டோர்: கல்விப்பிரகாசம் பிரஸ், 404, சென்னை-5.



காலம் அனைத்தும் மக்கள்தம்
கருத்தில் அகலா திருப்பவர்கள்
ஞாலத் துள்ளே இருவர்தாம்–
ஒருவர் வள்ளல்; மற்றொருவர்
சாலச் சிறக்கும் பாவாணர்;
தகைசேர் இருவர் ஒன்றாகி
மேலச் சிறந்த சங்கு அப்துல்
காதர் மெய்யன் பாகினரே!

தோளாண்மை யாலே தொழிலில் சளைக்காமல்
தாளாண்மை தந்த தகுபொருளைச் செந்தமிழுக்கு
வேளாண்மை செய்யும் விருப்பினர்க்கு வையகம்
நாளாண்மை செய்யும் நயந்து.

த. கோவேந்தன்

## ஹாஜி சங்கு செய்யது அப்துல்காதர்

# வாழ்த்துரை

உலக வரலாற்றின் அடி நாள் தொட்டு வளர்ந்து வரும் சிறந்த மொழிகளில் உயர் மொழியாகவும், தனி மொழியாகவும், செம் மொழியாகவும் இன்று வரை நிலை பெற்ற வகையில் உள்ள மொழி, நம் அன்னைத் தமிழ் மொழியாகும்.

தனித்தியங்கும் உயிர்ப்பும், உலகில் உள்ள எந்த மொழிக் கருத்தையும் தமிழில் வெளியிடும் அளப்பரிய தனி ஆற்றலும் கொண்டது நம் மொழி.

பைபிலுக்கு அடுத்து திருக்குறள் தான் உலக மொழிகள் பல வற்றில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இது நமது உயர் தனிச் செம்மொழியாகிய தமிழுக்குக் கிடைத்த சிறப்பாகும். ''பிற மொழிகளில் உள்ள கவிதை, காப்பியங்களை மூலத்தின் சுவை குன்றாமல், தனித் தமிழில் சொல்ல முடியுமா?'' என்ற கேள்விக்கே இடமில்லாத வகையில் இன்று பிற மொழியில் உள்ள கருத்துகள் அனைத்தும் தமிழ் மொழியில் வளம் பெற்று வருவதை வரலாறு கூறும்.

இத்தகைய முயற்சிகளே தமிழுக்குச் சிறந்த மணிமுடியாக, விளங்கி உலக வரலாற்றில் தமிழை கலையரசியாக மிளிரச் செய்யும். தமிழுக்கு மணிமுடி வைத்ததைப் போல் இருக்கும் இந்தமுயற்சியின் ஒருவைரமாக பெர்சியன், உருது, மொழிகளில் உள்ள மகாகவி இக்பாலின் பாடல்களைத் தமிழில் மொழி பெயர்த்து, இக்பால் நூற்றுண்டு விழாவின் நினைவாக வெளியிட வேண்டும் என்று நண்பர் த. கோவேந்தன், பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் வாயிலாக முயன்றபோது த. கோவேந்தன் ஆற்றும் பணிக்கு ஒரு சிறு உதவி அளிக்கும் பேற்றைப்

பெற்றேன். இந்தப் பேற்றை எனக்கு அளித்த அவருக்கு மிக்க நன்றி.

தெரிந்தவர் என்றோ, அல்லது நான் ஒரு முசுலிம் என்றோ, இதற்கு நான் உதவி செய்யவில்லை. உதவி இன, மொழி எல்லை கடந்தது.

நான் ஒரு தமிழன்; தமிழுக்கு உந்தாற்றல் தரும் எவரையும் ஊக்குவிக்கும் அன்பன். என் உயர்தனிச் செம்மொழி உலக அரங்கில் ஒப்பில்லா இடம் பெறவேண்டும் என்ற தணியாத வேட்கை இப் பணிக்கு இறை என்னை ஆட்கொண்டது.

இறைவா நின் பேரருளால் இது போன்ற முயற்சிகட்கு என்னை மென்மேலும் உதவ அருள் புரிய வேண்டுகிறேன்.

# முன்னீடு

ஆர்வம் நிறைந்த அன்புணர்வால் ஆளை விழுங்கித் திக்கு முக்காடச் செய்யும் மொழியின் விழிகளே அருமைப் பாடல்கள்.

உண்மையின் உள்ளத்துணர்வுகள் இயற்கையோடும் மாந்த உலகோடும் ஒன்றித் திளைத்த பட்டறிவின் தெளிவே இந் நூல். ஒவ்வொரு பாட்டும், அடியும் உள்ளொளியின் கீற்றுரும். மண், விண், காற்று, நீர், வெளியின் ஊடெலாம் ஓடியாடிய மனத்தின் குணம், குறிகளே இப் பாடல்கள்.

கடந்த காலத்தைக் கடந்து, நிகழ் காலத்தை நினைந்து, எதிர் காலத்தின் வழிப்போக்கில் விழி செலுத்தும் முன்காணியின் நிலையே நூல் எங்கும்காண முடிகிறது. இக்பாலின் காட்சியுணர்விலும், கருத்துணர்ச்சியிலும், மொழி எழுச்சியிலும் அன்பின் வண்ணங்கள் கூத்தாடுகின்றன. உண்மையின் பண்ணொலிகள் நாடி நரம்புகளில் தாளமிடுகின்றன.

மாந்தன் வாழ்க்கை, ஒழுங்கு, தனிமை, அமைதி, இயற்கை, கலை ஆகியவற்றைப் பாடும் பாடல்களின் புத்தெண்ணம் அனைத்தும் புண்பட்ட மாந்த இனத்தாரைப் பண்பட்ட நிலைக்கு அழைத்துச் செல்கின்றன.

நாம் ஓர் அழிவின் எல்லையில் வாழ்கிறோம் அதனை உணர்த்தி விழிப்புறச் செய்து இருள் ஒளியாக வேண்டும்; குருதிவெறி அன்பாக வேண்டும்; துன்பம், இன்பமாக வேண்டும்; பகைமை தோழமையாக வேண்டும்; உலக அமைதி, உண்மை அன்பு ஆகிய இரு சிறகுகளுடன் பறந்துயர்ந்து இசைக்க வேண்டும் என்று ஊக்குவனவே இக்பாலின் பாடல்கள்.

எல்லாம் நம்முள்ளேயே உள்ளன. காலம், காலம் கடந்தது. துறக்கம், நிரயம், பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் அனைத்தையும் நாமே படைக்கிறோம். விழிப்பு நிலையிருந்தால்

துடைக்கிறோம், என்பதை மன்பதைக் குணர்த்தும் தோழர் ம. இலெ. தங்கப்பா இப் பாடல்களை ஆங்கில மூலத்துடன் ஒப்பிட்டுத் செப்பனிட்டுத் தந்தார்.

யானறிந்திருந்த இக்பாலின் பேருள்ளத்தை, பேருருவை, பாட்டெழிலை மேலும் எனக்கு அறிமுகம் செய்தூக்கிய உருது மொழிப் பாவலர் காவிஷ் பந்திரி ஒத்துழைப்பு பெரியது.

கலை, தன்னை மணந்து வாழும் காதலனையே விரும்புகிறது. வியந்து காதலிப்பவனுக்கு வாழ்க்கை நிலை கைவரப் பெறுகிறது. அதன் வழியே மாந்த இனத்திற்குக் கலைக்காதலன் மாபெரும் வள்ளலாகின்றான்; பரிசளிக்கின்றான். அவ்வகையில் இக்பாலின் வாழ்க்கையும் இலக்கியமும் நூற்பரிசினை அளிக்கும் வள்ளல் பெருந்தகை ஆஜி சங்கு அப்துல்காதர் ஆவார்.

பாட்டு அன்பாற்றலுடையது. அதுவே மாந்தரைக் கூட்டுவிக்கிறது; ஆட்டுவிக்கிறது. அந்த நிலையில் இந்த ஏட்டுச் சிறப்புக்கெல்லாம் உயிரோட்டமாய் நின்றவர் ஆற்றுப் படுத்தியவர் நண்பர், புலவர். வா. மு. சேதுராமன் ஆவார்.

மானுடத்தின் பேரறிவே நாம் பெறும் பேறு; மானுட மாண்பே முடிவற்றது என்றுணர்த்திய தோழர் ப. சீவானந்தத்தின் கட்டுரையை நூலுள் சேர்த்துள்ளேன் பயன் பெறுக.

இந் நூலின் இறுதியில் உள்ள இக்பாலின் வாழ்க்கை வரலாற்றை, நன்காய்ந்து எழுதி நூலிற்குச் சிறப்புச் செய்த 'திட்டம்' உதவி ஆசிரியர் பாவலர் சொக்கு சுப்பிரமணியம் துணை மிகப் பெரியது.

பாட்டுக்கலை, பிற கலைகளைப் போலவே ஒழுங்குடையது, செம்மையுடையது. விழுமியது. நாம் எண்ண உலகிலே இருந்தாலும் நாம் படைத்த வடிவுக்கும், வண்ணத்திற்கும், ஒலிக்கும், உருவுக்கும் கட்டுப்பட்டவர்கள். நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப் பன்று. கருத்தின் மொழியாக்கமே (Transcreated). கற்பார்க்கு எளிமை கருதி சீர், அடி, தளைகளை வகையுளியாக்காமல் விட்டுள்ளேன்.

இந் நூலில் இடம் பெற்றுள்ள பல பாடல்களுக்குரிய அரிய நூல்களைத் தந்துதவியவர் மறைமலையடிகள் நூலகர் தோழர் இரா. முத்துக் குமாரசாமி.

பாட்டுகளின் கருத்துகளிலும் பண்களிலும் கற்பவர் கூட்டுறவு கொள்ளும் போது நன்றி தெரிவிக்கும் நாவும் மொழியும் தம் வலுவை இழந்து விடுகின்றன. நூல் வெளிவர ஒத்துழைத்து முனைப்புடன் நின்ற வள்ளல் பெருந்தகைக்கும் மற்றவர்க்கும் நன்றி உரித்தாகுக.

தோழமையுள்ள

த. கோவேந்தன்

# கருவிநூல் பட்டியல்

1. Iqbal – As a Thinker – By Various Authors.
2. Iqbal - His Art and thought S. A. Vahid.
3. Indian Litrature.
4. Illustrated weekly.
5. முறையீடு – தமிழ் உரை நடை.
6. இக்பால் யார்? – ஜே. எம் உசேன்.
7. மகாகவி இக்பால் – ஆர். பி. எம். கனி.
8. இக்பால் மலர் – பி. எம். சமால் முகமது.

# இக்பால் இலக்கியமும் வாழ்வும்

## ப. சீவானந்தம்

'புதிய மனிதன்' உருவாகிறான் என்று நம் பேரறிஞர் கிருட்டிணமூர்த்தி அண்மையில் பேசி வருகிறார். பெசன்ட் அம்மையாரால் உலக குருவாக, ஞான ஒளியாக வளர்க்கப் பட்டவர் இவர்.

உலகம் ஒன்றுபட்டுவிட்டது, நாடுகள் வீடுகளாய் ஆகி விட்டன; ஒரே உலகம், ஓர் உலகம் என்ற கருத்து செல்வாக்குப் பெற்று வருகிறது. உலகின் பல்வேறு அறிவு வளர்ச்சித் துறைகளிலும் ஏற்படும் மகத்தான மாபெரும் முன்னேற்றங்களும் சாதனைகளும் 'புதிய மனிதனை' உருவாக்குகின்றன.

இந்தப் புதிய மாமனிதனைப் பாரதி பாடினான்; இக்பால் பாடினார்; அனைத்துலக மனிதனைநோக்கி ஓடிய இரவீந்திரநாதர் பாடினார்.

"ஆகச் சிறந்த மனிதனை மனிதனுடைய சக்தி, வல்லமை சாகித்தியக் கூறுகள் அனைத்தையும் இனிய முறையில் ஒருங்கிணைத்து நிற்கும் முழுமைபெற்ற மனிதனைக் காணும் வேட்கை - (The Quest for Perfect Man) — இதுதான் இக்பாலுடைய தத்துவத்தின் திரண்டநிலை" என்று அறிஞர் கூறுகின்றனர்.

பிரிவினைக்கு முன்பு இருந்த இந்தியாவுக்குப் பெருமை சேர்த்த உலக மகா கவிகள் மூவர் — தாகூர், இக்பால், பாரதி.

அவர்களில் கவி இக்பால் பேரறிஞர், விஞ்ஞானி, சட்ட நிபுணர், ஐன்ஸ்டீன் கண்ட 'தொடர்பு நிலைத் தத்துவம்' பற்றிச் சிறந்த அறிவு பெற்றிருந்தார்; பன்மொழிப் புலமை மிக்கவர்.

'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்ற தாயுமானவரின் குரலை எதிரொலித்த இக்பால் குழந்தையின் பிரார்த்தனை என்ற ஒரு பாடலில் பின்வருமாறு பாடுகிறார். "என் உள்ளத்தில் உதித்த ஆசையெல்லாம் வேண்டுகோளாக உருவெடுத்து உதட்டில் வருகிறது. இறைவா, என் வாழ்க்கையை ஒரு தீபத்தைப்போல் அமைத்துவிடு. என் வாழ்க்கையின் மூலமாய் உலகிலிருந்து இருளை அகற்றிவிடு. என் பிரகாசத்தால் ஒவ்வோரிடத்திலும் ஒளி உண்டாக்கி விடு. மலர்களால் பூந்தோட்டத்துக்கு எழில் உண்டாவதைப்போல் என் உயிரால் என் நாட்டுக்கு உயர்வு உண்டாக்கிவிடு. இறைவா, என் வாழ்க்கை ஒரு விட்டிலைப போல் ஆகட்டும். அறிவு என்னும் விளக்கை நான் நேசிக்கட்டும். என் பணியெல்லாம் ஏழைகளுக்குத் துணை செய்வதாகவே இருக்கட்டும். துன்புற்றோரையும் வயோதிகரையும் நான் நேசிக்கட்டும். என் அல்லாவே, என்னைத் தீமையிலிருந்து காப்பாற்றுவாயாக. நேரிய வழியில் என்னை நடத்துவாயாக!" "தொழிலாளிக்கு உற்ற நண்பன், முதலாளிக்குச் சாவு மணி" என்று குர் ஆனை அவர் வருணித்தார்.

"இக்பாலின் கவிதைகள் அதிகாலையிலே ஒட்டகப் பிரயாணிகளை எழுப்பும் மணியோசை ஆகட்டும். எமது மக்களின் பிரயாணக் கூட்டம் மறுபடியும் விழித்து முன்னேறிச் செல்லட்டும்" என்று பாடிய இக்பால், "சீனமும் அரேபியாவும் எங்கள் நாடே, இந்துத்தானமும் எங்கள்

நாடே...உலகெல்லாம் எங்கள் நாடே" என்று சர்வதேசிய கீதம் இசைத்தார்.

"உலகின் பெரும் விதியை நிர்ணயிக்கும் நட்சத்திரம்" ஆக மனிதன் திகழ வேண்டுமென்று இக்பால் விரும்பினர். மனிதன், இறைவனின் பிரதிநிதியாக உலகில் ஒளிவிட வேண்டுமென்று அவர் விரும்பினர். அத்தகைய மனிதன் பூவின் அரும்பினுள் இருக்கும் மணத்தைப் போலச் சிறைப் பட்டிருப்பதை அவர் விரும்பவில்லை. "பூஞ்சோலையின் தென்றலுடன் கலந்து உலகெங்கும் உனது நல் மணம் கமழும் படிச் செய்து விடு. இழிவான சிறு அணுவாக இருக்கிருயே, பெரும் பாலைவனமாக மாறிவிடு. இலேசான இளங்காற்றின் அலையாக இருக்கின்ருயே. சக்தி வாய்ந்த பெரும் புயலாகப் பெருகிவிடு. உன் அன்பின் வன்மையினுலே அற்பப் பொருளை யெல்லாம் உயர்ந்ததாகவும் புகழுடையதாகவும் செய்துவிடு" என்று இக்பால் பாடினர்.

குறுகிய தேசிய வெறியை அவர் என்றும் போற்றவில்லை. "நாட்டுப் பித்து எனும் தூசியால் அழுக்குப் படா திருக்கும் தூய ஆடையுடுத்திய மனிதனையே இறைவன் போற்றுகிருர். குடியேறிச் சென்ற நாடாகிய எகிப்தையும் பிறந்த நாடாகிய கன்ஆன் நாட்டைப் போலவே ஏற்றுக் கொண்ட யூசுப் நபியைப் போன்றவனையே இறைவன் வாழ்த்துகிருர்" என்று இக்பால் பாடினர்.

முதலாளித்துவ அமைப்பு, நாளும் உழைக்கும் வர்க்கத்தை நசுக்கிப் பிழிந்த கொடுமையைக் கண்டு உருகிய இக்பால் மனிதனை, சாதாரண மனிதனை, மகத்தான சக்திகளைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் மனிதனைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் அளித்து நம்பிக்கை ஊட்டினர்.

"இந்த உலகு எனும் மலர்ப் பூங்காவின் நாசநிலையைக் கண்டு நீ கவலைப்படாதே! விரைவில் இதன் கிளைகளிலிருந்து நட்சத் திரங்களைப் போன்ற பூங்கொத்துக்கள் பிரகாசிக்கும் காலம் வரப் போகிறது. பூந்தோட்டத்திலிருந்து குப்பை கூளங்கள்

அகன்றுவிடும் காலம் வரப்போகின்றது.வானத்தின் நிறத்தைச் சற்றுக் கண்ணெடுத்துப்பார். அது கருஞ்சிவப்பாயிருக்கிறது. இத் தோற்றமானது, பரிதி உதித்து மேலோங்கி வரும் அறிகுறியாகும்."

இந்த நூற்ருண்டை மகமது இக்பால் தமதாக்கிக் கொண்டு விட்டார். ஆயிரமாயிரவரை அவர் தன்னந் தனியாக வெற்றி கொண்டு விட்டார். நூறு குதிரை வீரர்களின் வல்லமையுடன் வல்லமைமிக்க புலவர் பெரும் படையை அவர் ஓடோடச் செய்து விட்டார். அறைகூவலுக்கும் அழைப்புக்கும் ஈடாக மாபெரும் திறன்கள் படைத்துத் திகழ்ந்த அவர், மற்றவர்களை மிஞ்சி நின்று சிறந்து விட்டார். என்று இக்பாலைப் பாரசீக மகாகவி பகார் புகழ்ந்துரைத் துள்ளார்.

"பழைய ஆட்டு மந்தைகளின் தலைவன் பிளேட்டோ" என்று இக்பால் கூறினுர். கவியினுடைய உள்ளம், கலைஞனுடைய உள்ளம் அனிச்ச மலரினும் மெல்லியது என்று அவர் கூறினுர். "உன்னுள்ளே இறைவனுடைய பண்பை வளர்த்துக் கொள்" என்று மனிதனிடம் கூறினுர். களிமண்ணை மனிதனுக்க வேண்டும். அதுதான் கலையின் தொழில் என்று இக்பால் கூறினுர். "சமுதாயத்தில் ஒரு மணியாக, ஒரு ஜீவ உறுப்பாகத் திகழ்வாயாக. இலட்சியமற்ற புழுதியாகச் சுழலாதே" என்று மனிதனை அவர் கேட்டுக்கொண்டார்.

"இன்றைக்கு உள்ள இரகசிய உள்ளம் எனக்கு ஒரு பொருட்டல்ல; வருங்காலத்துக் கவிஞனின் குரலே என்னுடையது" என்று இக்பால் கூறினுர். வாழ்வு சதா மாறிக் கொண்டே இருக்கிறது என்று அவர் வலியுறுத்தினுர். வாழ்க்கை அமரத்தன்மை உடையது என்பதை அவர் உரத்த குரலில் கூறினுர்.

மனிதன், பஞ்சணையில் சோம்பேறியாகப் புரண்டு படுத்து உறங்கப் பிறந்தவனல்லன் என்று இக்பால் கூறினுர். "நீ இராஜாளிப்பறவை; நீ வல்லூறு. உனது விதி, ஓய்வறியாப்

போராட்டம் ஆகட்டும்; மேலே. மேலே, பறந்து செல் இடைவிடாது முன்னேறிச்செல்; வானங்களுக்கு அப்பால் உள்ள வானவெளிகள் உனக்காகக் காத்திருக்கின்றன" என்று இக்பால் பாடினார்.

இக்பால் கையாண்ட அரிய உருதுமொழி நடை பாரசீக மொழியின் தத்துவ வளத்தையும் செல்வாக்கையும் கொண்டிருந்தது; அதை நல்ல உருதுமொழி பேசுவோரும் அரிதின் முயன்று படித்தறிய வேண்டியிருந்தது. ஆயினும் அவருடைய கவியுள்ளத்தை. அதன் தன்மை நிறைந்த காம்பீர்யத்தை மக்கள் படிபபடியாக உணர்ந்து போற்றத் தொடங்கினர்.

கலையைப் பற்றி, உயர்ந்த மக்கள் கலையைப் பற்றி இக்பால் விரிவாக ஆராய்ந்தார்.

"அன்பு வெறியிலே கலை எனும் நல்லிசைப் பண் ஊட்டி வளர்க்கப்பட வேண்டும்; ஜீவரத்தத்தில் கரைந்து நிற்கும் நெருப்பாக அது திகழ வேண்டும், பொருள் இல்லா இசை ஜீவனற்றது. அணையும் நெருப்பில் உள்ள வெம்மையைப் போன்றே அதன் ஆற்றல் இருக்கும். திறன் படைத்த கலைஞன் என்பவன் இயற்கையைத் துருவி அதன் பரம இரகசியங்களை, அற்புத அழகுகளை நமது புலன்களுக்குப் புரிய வைப்பவனே. அப்போது அவன் ஒரு புதிய உலகத்தைப் படைக்கின்றான். நமது வாழ்க்கைக்கு ஒரு புதிய உயிர்த்தன்மையை அவன் அளிக்கிறான்" என்று இக்பால் கூறினார்.

முர்ராஹ்வ—இ—சுஹ்டை என்ற நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் அவர் மேற்கண்டவாறு கூறுகிறார். "இறைவன் வாழ்கிறார்; மனிதன் வாழ்கின்றான்; இது எவ்வாறு சாத்திய மாகிறது? இருவரும் சிருஷ்டித் தொழிலை இடைவிடாது செய்து வருகின்றனர்; இதுதான் அந்த வினாவுக்கு விடையாகும். ஆம்; அத்தொழில் மூலம்தான் இருவரும் வாழ்கின்றனர்'! என்று இக்பால் கூறினார்.

படைப்புத் தொழிலில், ஈடுபட்டுள்ள ஒரு கலைஞன், தனது சூழ்நிலையுடன் இடைவிடாது போராட்டம் நடத்துகிறான். சூழ்நிலையை வெற்றிகொள்ள அயராது போராடுகின்றான். இப் போராட்டம், அவனுடைய ஜீவனுள்ளே இருக்கும் உள்ளார்ந்த சக்திகளை மலர்விக்க அவனுக்குத் துணை செய்கிறது; கலையை உருவாக்கத் துணை செய்கிறது. இப் போராட்டம் அல்லது பரபரப்பு நிலை, அக் கலைஞனுடைய ஆளுமை (Personality)யின் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. அது தான் கலையின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். இவ்வாறாக மனிதனின் பிற நடவடிக்கைகளுக்கு உள்ளது போன்றே கலைக்கும் ஒரு பரிசோதனை வைக்கிறோம். ஆளுமையைச் சுற்றி எழும் கலை முழுமை பெற்றதாகவும் சிறந்ததாகவும் இருக்கிறது, ஆளுமையைச் சிதைக்கும் அல்லது பலவீனப்படுத்த முயலும் கலை நசிவுத் தன்மை கொண்டதாகவும் (Unhealthy) விரும்பத் தகாததாகவும் (Undesirable) அமைகிறது.

கலை கலைக்காகவே என்று பேசும் மேதாவிகளை நம் இக்பால் பாராட்டவில்லை; அந்தக் கூற்றை அவரால் சகிக்கவே முடியவில்லை. "உண்மையான கலை மனித வாழ்க்கை மீது ஆழமான விரைவான முத்திரை கொண்டிருக்க வேண்டும்; கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்தாய், உள்ளுணர்வுகளுக்கு இன்பமும் எழுச்சியும் ஊட்டவல்லதாய் இருக்க வேண்டும், அந்தச் சமயத்தில் மனிதனின் சிந்தனை ஆற்றல் முதலிய மேம்பட்ட துறைகளுக்கு நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ வேண்டும். கலையின் நோக்கம் வாழ்க்கைக்குத் தொண்டாற்றுவதாக, வாழ்க்கையை மேன்மேலும் அழகும் பொலிவும் அமைதி நிறை இன்பமும் சேர்ப்பதாக இருக்க வேண்டும்; இன்பமும் மகிழ்ச்சியும் தருவது மட்டுமே மெய்யான கலை முயற்சிகளின் பணியாக இருக்கக் கூடாது. மெய்யான கலையின் பணி அல்லது தொழில், மனிதனின் உயர்ந்த மெல்லுணர்வுகளைத் தட்டி எழுப்புவதாக அமைய வேண்டும்" கலை பற்றி இக்பால் இத்தகைய கருத்துகளையே

கொண்டிருந்ததை இக்பாலின் தோழரும் அவருடைய கவிதைக் கலையை நன்கு அனுபவித்து விமர்சித்தவருமான சையிது அப்துல் வாயித் தமது IQBAL, his Art and Thought என்ற நூலில் விளக்கியுள்ளார்.

படைப்புத் தொழிலில் இறைவனுடன் உயர்ந்த நிலையில் நின்று ஈடுபட்டிருக்கும் சிறந்த கலைஞன் ஒருவன், இறைவனுடைய படைப்பு முயற்சிகளைவிடத் தன்னுடைய கிருஷ்டிகள் மேம்பட்ட கலை, தொழில் நுணுக்கங்கள் கொண்டிருப்பதைக் காண்கிறான்; இதை இறைவனிடமே அக் கலைஞன் சுட்டிக் காட்டுகிறான். இதை இக்பால் பின்வருமாறு பாடுகிறார்.

"இறைவ, இருள் ஆட்சி செலுத்தும் இரவைப்
படைத்தவன் நீ;
இருள் அகற்றி ஒளிபரப்பும் விளக்கைப்
படைத்தவன் நான்!
களிமண்ணைப் படைத்தவன் நீ;
அழகு சிந்தும் வண்ணக் கிண்ணம்
படைத்தவன் நான்!
பாலை நிலத்தையும் மலைகளையும் காடுகளையும்
படைத்தவன் நீ;
பூங்காக்களையும் தோட்டங்களையும் பழமுதிர்ச்
சோலைகளையும் படைத்தவன் நான்!
நீ கல்லைப் படைத்தாய்;
நல்லழகு உணர்த்தும் கண்ணாடியை நான்
படைத்தேன்!
நஞ்சைப் படைத்தவன் நீ என்றிடில்
அதை நல்மூலிகையாக மாற்றியவன் நான்."

நெஞ்சினிச்சு, சிந்தனைக்கு விருந்து தரும் இவ் வழகிய கவிதையில் கவியின் லட்சணங்களை இக்பால் மிகத் தெளிவாகக் கூறி விட்டார்.

"அக நிலையையும் ஆற்றலையும் பற்றிய எத்தனையோவித ரகசியங்களை நன்கறிந்தவன் இந்த மனிதன்; தர்க்கத்தையும் தத்துவத்தையும் நன்கறிந்தவனும் இந்த மனிதன்தான்" என்று இறைவன் கூறுவதாக இக்பால் கூறுகிறார். அடியார்களையும் இறைவனுடன் சமநிலையில் வைத்துவிட்ட மானிடனை இறைவன் வியந்து பாராட்டுகிறார் என்று இக்பால் பாடுகிறார் மனிதன்பால் இக்பால் கொண்டிருந்த மதிப்பும் நம்பிக்கையும் தான் எத்தகையது!

பழம் பெருமையைப் பேசிக்கொண்டு வெறியூட்டி அலையும் கூட்டத்தினரை "மூதாதையரின் புதை குழிகளை விற்றுச் சாப்பிடுவோர்" என்று இக்பால் சாடுகிறார். புதியன கண்டு பிடித்தல், இலக்கிய ஆராய்ச்சி, மூதாதையினருக்கு இழிவு வராமல் பாதுகாத்தல் ஆகியவற்றை விட்டு நம்பிக்கை இழந்து தோல்வி மனப்பான்மையுடன் 'நாளை. நாளை' என எதிர்பார்த்திருக்கும் செயலற்ற சோம்பேறிகளை இக்பால் வெறுத்தார்.

"நோன்பின் துன்பங்களைச் சகித்து, இறைவனை மனமார நேசித்து. திமிர்பிடித்த பணக்கார சாதியின் குற்றங்குறைகளை மறைத்து அவர்களுடைய மானத்தைக் காக்கும் ஏழைகளால் தான், உழைக்கும் மக்களால்தான் உலகில் அறம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது' என்று இக்பால் பாடினார்.
மிகக் சிறந்த எழுமீன் கூட்டம் போன்ற உயர்ச்சியை மனிதன் தனது இருப்பிடமாக்கிக்கொள்ள வேண்டுமென்று இக்பால் விரும்பினார்.

மகாகவி இக்பால், தாம் வாழ்ந்த காலத்தில் இவ்வுலகின் மேற்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற மகத்தான மாறுதல்களை மிக நுணுக்கமாகப் பரிசீலித்து வந்தார். சோவியத் ருஷ்யாவின் மகத்தான தோற்றத்தையும் அது உணர்த்தும் மாபெரும் உண்மைகளையும் நன்கறிந்தவர் இக்பால். சோவியத் நாட்டில் புதியதொரு சமுதாயம் மலர்ச்சி பெற்று வருவதை அவர் மிக

நுட்பமாகப் புரிந்து கொண்டார். தன் நெஞ்சத்துக்கு உடன்பாடான புதிய சமுதாயக் கருத்துகள் அங்கு உருவம் பெற்று வருவதை அவர் கண்டார். அந்த மகத்தான சமுதாய எழுச்சியை முசுலிம உலகுக்கு உணர்த்த அவர் விரும்பினர். அந்த நிலையில்தான் 'இலெனின், தேவ கன்னிகளின் பாட்டு, இறைவனின் கட்டளை' என்ற முப்பெரும் பாடல் (Trilogy) உருவாயிற்று. இதில் இக்பாலின், கலை, உலகு தழுவிய அம்சங்களைப் பெறுகிறது.

இலெனின் வாழ்ந்த நாளில் கடவுளை நம்பியறியாதவர்; அவர் ஒரு நாத்திகர். அவர் சோவியத் வாழ்வின் மூலவர். மனித வர்க்கத்தின் கணிசமான ஒரு பகுதி மக்கள் சிறந்த நல்வாழ்வு பெற புதிய சமுதாயத்தைக் கண்டவர். இலெனின் படைத்த வாழ்க்கை அமைப்பில் அடிமை இல்லை, ஆண்டான் இல்லை, சுரண்டல் இல்லை, கொடுமை சூது இல்லை. எல்லோருக்கும் சமஉரிமை, சமவாய்ப்பு அளிக்கப்படுகிறது. மகாகவி இக்பால் இந்த வாழ்வை நேரிலும் காண்கிறுர்; உணர்ச்சிப் பெருக்கடைகிருர். இசுலாமிய உலகம், இந்த நல் வாழ்வை ஒப்பி வாழ வேண்டுமென்று விரும்புகிருர். எனவே நாத்திகரான இலெனின் முன்திடீரென்று ஆண்டவனை எதிர்ப்பட வைக்கிருர். இலெனினைப் பல கேள்விகள் எழுப்ப வைக்கிருர். ஆண்டவன் வாய்மொழியாக ஆண்டவன் பதிலாகப் புதிய சமுதாயக் கருத்துகளை இசுலாமிய உலகுக்கு எட்டச் செய்கிருர்.

இக் கவிதையின் நடை யழகு மரபுவழி வெளியீட்டு முறை (classic)க்கு ஒத்தது. எடுத்தாண்ட பொருள் அதீதக் கற்பனை (Romantic) வகைப்பட்டது. இலெனின் பேச்சு துருவி ஆராய்ந்து எதையோ தெரிந்து கொள்ளத் துடிக்கும் நிலையை வெளிப்படுத்துகின்றது அவருடைய பாத்திரப் படைப்பு அதீதக் கற்பனையே, தேவ கன்னிகளின் கூட்டிசை ஓசை நயமும் எதுகை மோனைச் சிறப்பும் பெற்றிருக்கின்றன. உயிரின் ஆழத்திலிருந்து பிறக்கும் நாதவடிவின் பெருமைகளை அந்த இசையில் காண்கிறோம். இறைவனின் கட்டளை,

மிகுந்த உணர்ச்சிக் கட்டுப்பாட்டுடன், ஆழ்ந்த குரலில் வெளிப்படுகிறது. அதில் பரம்பொருளின் காம்பீர்யத்தையும் பெருமிதத்தையும் இக்பால் கொண்டு நிறுத்துகிறார் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

## லெனின் கேள்வி

முதலில் இறைவனிடம் இலெனின் பின்வருமாறு கூறுகிறார்:

"வாழ்விலும் இயற்கையிலும் உனது குறியீடுகள் ஒருமையை உணர்த்துவன; ஆதியும் அந்தமும் இல்லாதவன் நீ என்கிறார் உனை; என்றும் வாழ்கிறாய் என்கிறார் உனை; ஆயின் நீ நிலைபெற்றிருப்பதை யான் அறிவதெங்ஙனம்? மேதையர் தம் கருத்துகள் நாளும் மாறுகின்றனவே, இன்று நான் கண்ணெதிரே காண்கிறேன்- உனை இப்போதும் திருச்சபையின் கட்டளைக் கருத்தே என் கவனத்துக்கு வருகிறது...

"உன் அனுமதியுடன் ஒரு வினாவினை எழுப்ப விரும்புவேன் யான், ஆண்டவனே இவ் வினாவுக்கு வேதாந்தியின் பெருநூல் ஏதும் விடை தரவில்லை! நீ யாருக்கு இறைவன்? வானங்களினடியில் வதியும் களிமண்ணால் ஆன மனிதனுக்கு இறைவனா நீ? யாருக்கு இறைமை உணர்த்தி நிற்கின்றாய் நீ?...

"கீழைய நாடுகளுக்கு கடவுளார் ஐரோப்பிய வெள்ளையர்; மேலைநாடுகளுக்கோ வெனில் ஒளிவிடும் டாலர்களே இறைவராம்! இந்த ஞானம். இந்த அறிவு. இந்த ஆட்சித்திறம், இந்த ராஜாங்க அமைப்புத்திறம் அனைத்தும் கொண்டு அவர்கள் குடிப்பதோ ரத்தம். ஆயின் அவர் தம் சமத்துவப் பேச்சில் குறைச்சல் இல்லை! முகங்களில் மாலைப்போதில் காணும் செந்நிறத்திரட்சி வண்ணப் பூச்சுகளின் விளைவு; அல்லது மது ஊறித் ததும்பும் நிலையின் காட்சி......

"இருக்கட்டும் நீ இறைவன், சர்வ வல்லமை நிறைந்தவன் நீ; நீதியின் தேவன் நீ; ஆயின் உனது உலகில்

துரதிஷ்டம் மிக்க தொழிலாளியின் நிலேயோ படுமோசம்; மிக மோசம்! முதலாளித்துவப் படகு மோதிச் சிதறுவது எப்போது? உனது உலகம் காத்திருக்கின்றது; கணக்குத் தீர்க்கும் நாளை—மீட்சி பெறும் நாளை எதிர்நோக்கி—பொறுமை யிழந்து காத்திருக்கின்றது."

## தேவகன்னியர் சாட்சியம்

இலெனினது தெளிவான, நேருக்கு நேரான படுசுரீரென்த் தைக்கும் இச் சொற்கள் தேவகன்னிகளை உருக்கி விடுகிறது. அவர்கள் சேர்ந்து பாடுகின்றனர். இறைவனுடைய உலகின் நிலேயை அவர்கள் விளக்குகின்றனர்.

"நல்லறிவு இன்னும் கட்டுப்பட்டே இருக்கிறது; அன்பும் அருளும் நிலேபெறவில்லே. ஓ, தெய்வீக ஓவியனே, (இறைவா) உனது ஓவியம் மறைவிடத்தே கேட்பாரற்றுக் கிடக்கின்றது. கேளிக்கைக்காரனும் உன் பெயரால் எத்திப் பிழைப்பவனும், தலேவன் என்போனும், சந்நியாசியும் உலவியே வருகின்றனர். உனது பிரபஞ்சத்தில் சமரச நிலேயைக் காணேம். ஏற்றத்தாழ்வுகள் மலிந்த பழைய ஏற்பாடு இன்னும் நீடித்தே வருகிறது."

## இறைவன் கட்டளே

தேவகன்னிகளின் இப் பாடல் சர்வேசுவரனைக் கிளர்ச்சி யடையச் செய்கிறது, ஆழ்ந்த குரலில், காம்பீர்யம் மிக்க உறுதியுடன் அவர் பேசுகிருர். பாடுபட்டுப் பயிர் வளர்த்துக் காத்து அறுவடை செய்பவனுக்குப் பயன்படாத தானிய மணி கள் அனைத்துக்கும் நெருப்பிடுமாறு வானவர்களுக்கு இறைவன் ஆணை இடுகிருர்.

"எனது உலகின் ஏழை எளியோரைத் தட்டி எழுப்பு வீராக! ஆதிக்கக்காரர்களுடைய அரண்மனைகளின் அஸ்தி வாரங்களை உலுக்கிச் சிதையுங்கள். அடிமைகளின் ரத்தத்தில்

சூடேற்றுங்கள் ! வல்லூறை எதிர்த்துப் போராடும் ஆற்றலைச் சிட்டுக்கு அளியுங்கள்! உழுபவனுக்கு உணவாகப் பயன் படாத தானியக் கதிர்மணிகள் அனைத்தையும் நெருப்பில் இடுங்கள் ! நவீன நாகரிகம் ஊதுலையாகவே நிற்கிறது. கிழக்கு நாட்டின் கவிஞனுக்கு (இக்பாலுக்கு) ஆவேசம் அருளுங்கள். அவன் பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலிக்கட்டும்''.

இவ்வாருகத் தன் சொல்லை நின்று கேட்கத் தயங்கிய இசுலாமியர்களுக்கு இறைவன் வாயிலாகப் புதிய சமூக நீதியை இக்பால் உணர்த்தினுர்.

தாமரை. அக்.'62

# என்னுடைய பாட்டு

இளமையும் அன்பும்
இணைந்தினிக்கும்; நெஞ்சில்
வளமையும் வன்மையும்
சேர்க்கும்; கிளர்ந்தெழுச்சி
ஊட்டும்; உணர்ச்சியால்
உள்ளத்தை வானேற்றும்
பாட்டு; என்னுடைய
பாட்டு!

அன்பினைப் பாடும் என்
பாடல்களை உண்டெறியும்
என்பினைப்போல் விட்டெறிதல்
ஏன்? அவற்றுள் தென்புடைய
பேரறிஞர் தன்மையினைப்
பேரறிஞர் பீடதனை
ஓரணியாய்க் காண்பீர்
உவந்து!

# நான் யார் ?

தெய்வவெறி கொண்டஇப் பாவலன் தோழரே,
கிழக்கையோ மேற்கையோ
சேர்ந்திட்ட ஒருவன் அல்லேன் ;
மெய்யென்று உணர்ந்ததை வையத்திற் குரைக்கிறேன்
மேன்மையாய்ப் புகழும்எந்
நாட்டையும் சேர்ந்தேனலேன் ;
பொய்வந்த மதவாணர் புரட்டினில் சிக்கிலேன்;
புதுநா ரிகத்தினுள்
புகுந்துநுனிக் கொம்பேறிலேன் ;
கைவந்த நண்பரும் காணுத பகைவரும்
காதலித் துவப்பதில்லை ,
கருத்தொன்று படுவதிலைஏன் ?
நெய்வந்த தேனையும், நேர்எதிர் நஞ்சையும்
நிறையையும் குறையையும்
பகுத்தறிந்து உணர்பவன்நான்!
மெய்யினை அறிபவன் உண்மையை உணர்பவன்
மேவு குப்பைமேட்டினை
மேரு எனக்கொள்கிலேனே.

# மாந்தனைத் தேடும் மாந்தன்

என்னுடைய முன்னோர்
ஈடிணை யற்ற
அந்தணர்கள்;

இறைவனைத் தேடும்
பணியில் காலம்
கழித்தார்கள்!

இந்நாள் நானோ.
இவ்வுலகத்தில்
எங்கெங்கும்,

மாந்தனைத் தேடும்
பணியில் ஓயா
தலைகின்றேன்.

# தாயே !

அம்மா உன்னிடம்
பெற்ற பயிற்சியே "பெரும் புகழை
இம்மா நிலத்தில்
நான் அடைந்துயர உதவியது ;
செம்மாந் துயர்ந்த நம்
மூதாதையரின் குடிப்புகழை
அம்மா உன்னுடைய
அன்பால் உலகம் அறிந்ததுவே.

தாயே நீ, ஒரு
பொன்னேடாக விளங்குகிறாய்.
நீயே எனக்கு
வாழ்க்கை நெடுக நெறியுரைத்தாய்.
தூயேன் ஆகத்
தோழனும் ஆக உலகிதனில்
வாயேன் என்று
வாழ்க்கைக் கல்வி வழங்கினையே.

# தனிமை

என்றன் நெஞ்சு
கடந்த மாலையைக் கருதுகின்றது ;
என்றன் கண்கள்
வருநாள் விடியலை வழிபார்த்துள்ளன ;
மக்களிடையில் நான் தனித்து வாழ்வேன்.
வீட்டில் சுடரா விளக்கு
தனிமையில் எரிந்தே இனிமை பெற்றிடுமா?
என்னை விரும்பிட வீட்டில்
எவருமே இல்லையா ?
கழனியில் எழுந்த செங்கழுநீர் மலர்நான் ,
தனிமை யானவன்,
ஆண்டவ, அருளினை அருளுக, பரிவுகொள்,
பண்புடை நண்பினை அன்புடன் தருகவே.

# பாட்டுப் பறவைக்கு...

உன்னிடம் பாட்டெனும் பொன்னினைக் கண்டிடில்
வாழ்க்கையாம் உரைகல்லினில்
அன்புடன் தேய்த்துப்பார் உண்மையைக் காண்பை நீ
அருமையை உணர்ந்தறிகுவாய்!

பஞ்சணையில் நீண்டநாள் படுத்துக் கிடந்தநீ
பாழ்ந்தரையில் படுத்துணருவாய்,
கொஞ்சுகுளிர் நீரினில் குளித்த நீ கோடையின்
கொதிமணல் மீதுலவுவாய்!

எத்தனை நாள்கள்நீ ஆக்காத நல்லமுதை
இசைத்திசைத் தேஅலேகுவாய்,
எத்தனை நாள்கள்நீ பூக்கமழ் காட்டினில்
கூடொன்று இலாதிருப்பாய்!

மாமலை உச்சியில் கூடொன்று கட்டுநீ
வாழ்க்கைப் போராட்டத்தினில்
ஆம்உலைப் பழக்குவாய், வாழ்க்கைத் தணலிலே
ஆவியுடல்தான் பழக்குவாய்!

அச்சத்தை அல்லலை, ஆவலை அகற்று நீ
ஆகிடுக கல், வைரமாய்,
உச்சங்கொள் வன்மையைக் கொள்வதே வாழ்க்கையாம்
உயர்த்துக புகழுச்சியில்!

மெலிவுளம் பிழைசெயும் மேன்மையாம் பருவத்தை
வீழ்ச்சியின் வழி சேர்த்திடும்,
அடிமையின் இழிவையும் உரிமைவான் விரிவையும்
அறிந்திட வழி கூறுவேன்.

அடிமைதான் கூறிய ஒன்றையே திரும்பவும்
ஆய்ந்திடா துவந்துரைப்பான்,
பொடியளவு கூட அவன் தன்னறிவு பெற்றிலான்
பூக்காது புதுக்கருத்தே.

உரிமையன் சுறுசுறுப் பானவன் அவன்மனம்
உயர்எண்ண யாழ் இசைக்கும்
அரியவன் செயற்கரிய செயல்களை ஆற்றுவான்
அலைபாயும் நெஞ்சம் இலான்.

அடிமைக்குக் காலம் ஒரு தளையாகும், அவனின்வாய்
விதியதன் அடியே தொழும்;
உரிமையன் திண்ணியன், விதிக்கும் அறிவீபவன்
உழைப்பினால் உலகாள்வனே !

# எங்கள் நாடு

உலகில் சிறந்ததும் எங்களின் நாடே
ஒப்பிலா மலர்மணம் ஓங்கிய காடே
அலகிலாப் பாடல்கள் பாடுவம் யாமே
அன்புறு வானம் பாடிகள் தாமே.

வையத்தில் எங்கெங்குச் சென்றிட்டபோதும்
வாழ்ந்திடும் எம்உளம் தாயகமீதில்,
உய்யும் எம் உள்ளம் உயர்ந்திடும் நாடே
ஓங்கிடும் வாழ்க்கையும் தாயகத்தூடே!

ஈடற்றுயர்ந்ததும் எங்களின் மலையே
எழுந்துவான் முட்டிடும் குன்றின் தலையே
ஏடற்று எழில்மிகும் ஈடிலாச் செல்வி
எங்களைக் காத்திடும் பீடுறு புதல்வி!

ஆயிரம் ஆயிரம் ஆறுகள் ஓடும்
அவள்மடி வீழ்ந்து தவழ்ந்திசை பாடும்!
நேயமாய் ஆறுகள் பாய்ந்து கொழிக்கும்
நிலங்களால் வேற்றவர் நெஞ்சம் விழிக்கும்.

பொங்கிக் களித்தோடல் கங்கைப் பேராறே
பூரித்து உவந்ததும் உன் கரைப்பேறே!
எங்களின் வாழ்க்கை வழிப்போக்கிணைத்தாய்
எண்ணிப்பார் எண்ணிப்பார் அன்பில் பிணைத்தாய்!

ஒருவர்க் கொருவர் பகைகொளும் வண்ணம்
உண்மை மதம்சொல்ல வில்லையே திண்ணம்!
ஒருமைக்கு உதவுதல் உள்ளன்புப் பாட்டே
ஒற்றுமைப் பண்பேநம் ஒத்திசைக் கூட்டே!

அருமைசேர் இந்தியா ஈன்றநம் நாடே
அவளின் புகழ்காத்தல் நம்கடப் பாடே!
பெருமைசேர் அன்புக் குரியவள் அன்னை
பேசிடும் உண்மைக் குயிருடல் அன்னை!

கிரேக்கம், எகிப்து, உரோமையில் ஆட்சி
கிளரினும் பின்பவை கொண்டன வீழ்ச்சி.
ஒரேஉயர் பண்டைப் பெருமைகொள் பீடு
உயர்ந்து சிறந்தது நம்அரும் நாடு!

காலச் சுழற்சியில் பற்பல நூற்றாண்டு
காலினை நீட்டினர் வந்தேறிகள் ஈண்டு.
சாலப்பகையை வளர்த்தனர் ஓய்ந்தார்
தலைநிமிர்ந் தோங்கிய பாங்கினால் மாய்ந்தார்.

# இறைவா !

ஏஏ ! இறைவனே, ஏதோ மாந்தனை
அருமைப் பொருளாய்ப் படைத்துவிட்டதாய்ப்
பெருமை கொள்ளாதே, இறுமாப் புறாதே.
படைப்புரு வானவன் மாந்தனா? இல்லை ;
களிமண் பாவை ! கழிசடைப் படைப்பு !
சீரிலா இந்த ஓவியம் விடுத்து
வேறோர் ஓவியம் தீட்டு! வீறுடை
மாந்தனைப் படைப்பாய், இறைவா !
பொம்மைகள் படைப்பது செம்மை அல்லவே.

# தோழா !

உலகினுக்காய் நீ படைக்கப்
பெறவே இல்லை;
உயர்வானுக் காகவும்நீ
இல்லை. இந்த

நிலவுலகின் அழகெல்லாம்
உனக்காகத்தான்,
நீள்விசும்பின் விரிவனைத்தும்
உனக்காகத்தான்.

உலகிதனில் காலூன்றி
எழுவாய், தோழா,
உயர்வான முகட்டில் நீ
உலவு வாயே !

# இளவேனில்

தென்றல்மகள் கூத்தியற்றித்
தீங்குயிலைப் பாடவிடும்,
மன்றல்பூங் காட்டில்
மனவிழியைத் துன்புறுத்தும்;

முள்ளும் முளைத்திருக்கும்
முள்ளதுவே ஆனாலும்
கள்மலரின் கூட்டாளி
காதலன் – அள்ளி

அணைக்கின்ற ஆசை
வெறிமிகுந்தோன் அன்பின்
பிணைப்புக்குக் காரணம்
பேசில் – இணைக்கும்

உளவேனி லைத்தீர்க்கும்
ஓங்கும் இயற்கை
இளவேனில் ஈந்த
கொடை!

# மாந்தன் விருப்பம்

மாந்தற்குள்ள பெருமையெல்லாம்
புதுமை படைக்கும் மனத்தாலாம்!
மாந்தன் கைகளின் இவ்வாற்றல்
மண்ணை உயர்த்தும் பேராற்றல்!

வெண்ணிலாவும் விண்மீனும்
விளைந்த நல்லுயிர் ஒவ்வொன்றும்
விண்ணில் மண்ணில் என்றென்றும்
விளைந்த நாள்போல் சுழல்கிறதே.

.......

இறைவன் ஆணை இடுகின்றான் :
"இதுஇப் படியே இருக்கட்டும்,
முறைவே றெதையும் சொல்லாதே
முனைந்தே எதையும் செய்யாதே."

மனிதன் சொன்னான் : "ஆமாம் அது
மண்ணில் இப்படித்தானானால்
இனிஇப் படித்தான் இருந்திடுதல்
வேண்டும் எண்ணம் எனக்குரித்தே.

# இளம்பிறையே

காணும் இளம்பிறையே – விழிக்
காதல் குடியிருப்பே !
தோணும் நின் பாதையிலே – பல
ஆயிரம் ஆயிரமாய்ப்
பூணும் விழி வலைகள் – நின்
போக்கினில் சார்ந்தனவே.
நாணுதல் விட்டொழிவாய் – இன்றுண்
நலிந்த தோற்றம் எண்ணி
மாணும் முழு நிலவு – உன்னில்
மண்டி உளதறிவாய் !

# என் வேட்கை

அழகிய முகத்தைக் கண்டால்
அதைவிட எழில் மிகுந்த
அழகிய முகத்தைக் காண
ஆவலால் பறக்கின்றேன் நான்.

செங்கதிர் ஒளியில் விண்மீன்
செழிப்பினைக் காண வேட்பேன்,
பொங்கொளி விண்மீன் தன்னில்
செங்கதிர் பொலிய வேட்பேன்.

எந்தவோர் இடத்தையும் நான்
இலக்காகக் கொள்வதில்லை,
இந்தவோர் உலகில் சாவே
ஓய்வெனும் இன்பம் ஊட்டும்.

# சமூகம்

தனிமனிதன் சமூகத்தால்
சிறப்பெய்துகின்றான் ;
சமுதாயம் தனிமனிதர்
மூலம் சிறப்பெய்தும்.

தனிமனிதன் சமூகத்துள்
தனை ஆழ்த்தும் போது
சிறுதுளிநீர் பெருங்கடலாய்த்
தன்னுருவில் மாறும்.

தனிமனித எண்ணத்தை
வெளிப்படுத்த வேண்டித்
தூண்டுவதும் சமுதாய
உந்தாற்றலாகும்.

இனிதிலவன் ஒழுங்குறவும்
பண்படவும் செய்யும்,
ஏற்றமுறச் செய்யும் உயர்
நோக்கை விரிவாக்கும்.

சமுதாயம் எனும் கோவை
வடத்தினிலே மணியாய்ச்
சார்ந்திடு நீ அஃதின்றேல்
புழுதி எனப் போவாய்!

சமுதாயத் துயர்வெல்லாம்
ஒற்றுமையால் உண்டு !
தழைத்தோங்கும் அன்பிலையேல்
இல்லைஉயிர் வாழ்க்கை !

சமுதாய இன்னொளியை
ஒற்றுமையாம் நெருப்பே
சமைத்தளிக்கும் ஞாயிறின்றேல்
ஒளியுண்டோ கூறீர் ?

சமுதாயம் ஓர்இனமாய்
ஒன்றுபட்ட கருத்தில்
ஓரேகொள்கை ஓருணர்ச்சி
சார்ந்திடுதல் வேண்டும்.

# உலகியக்கம்

இவ்வுலகில் இயக்கமின்றி
நிலைத்திருக்க
இடமில்லை, இறப்பில்தான்
இயக்கம் இல்லை.

செவ்வையுற உழைப்பவர்கள்
முன்னேற்றத்தைத்
திசையெங்கும் எட்டுகின்றார்.
இயங்குகின்றார்.

அவ்வியக்கம் இல்லாமல்
ஒரு கணத்தைத்
தயக்கத்தின் 'அடிகொண்டு
நிற்பாராகில்

சிவ்வென்று பறந்தோடும்
காலத்தேரில்
நசுக்குண்டு சிதைந்தழிவர்
சுவடே இன்றி.

ஒவ்வொரு பொருளும் தன்னுள்
உந்தல் பெற்றே
உரிய ஒரு குறிக்கோளைக்
குழைக்கும் என்றும்.

# மேலை நாகரிகம்

மேலை நாட்டில் வாழ்வீரே, இறை
மேலோன் படைத்த இவ்வுலகைக்
காலை மாலைச் சந்தைக் கடையாய்க்
கருத்தில் கொண்டு மயங்காதீர்.

விலைபெரிதாக எண்ணும் பொன்னும்
வீழும் நாளை மதிப்பற்றே.
நிலையா மையெனும் நிழலைக்கருதி
நிற்பதுவும் ஒரு வாழ்வாமோ?

மெல்லிய கொம்பில் கட்டிய கூடு
விரைந்து நொறுங்கி அழிவதுபோல்
வெல்லும் உங்கள் நாகரிகவாள்
தானே அழிந்து நொறுங்கிடுமே!

# இழிவு

வேற்றவர் கல்வியைக் கற்கிறீர், பொருந்தா
விருந்துண் டுடலுயிர் நைகிறீர்,
மாற்றவர் சுண்ணம் முகத்தினில்—பூசி
மாயப்பொய் வண்ணம் உவக்கிறீர்.

நேற்றுஅவர் கைக்கொள் முறையினில்—பெறும்
ஊதியம் நூறாய் அடுக்குறீர்.
ஆற்றல் மிகும் உங்கள் உள்ளங்கள்—பிறர்
கருத்தின் அடிமைகள் ஆயின!

ஊற்றடைத் தேகடன் வாங்கிய – பிறர்
கற்பனை ஆசையே உங்களின்
தோற்றம் செயலினில் நிறைந்துள – உங்கள்
தூய வடிவினைக் காண்கிலேன்.

ஊற்ற மிகும்உகிர் வல்லூறு – கல்வி
ஒருசிறு வாத்திடம் கொள்வதா?
ஏற்ற மிகும்ஒளி ஞாயிறு – விண்
மீன்களினால் எழில் ஏற்பதா?

# எண்ணிப் பார்!

சிந்தையற்றவனே இந்த
நாட்டினை எண்ணிப் பார்நீ
நொந்தழச் செய்யும் நாள்கள்
நொடிதொறும் வளர்தல் காணுய்!
வெந்தழல் உனை அழிக்க
விரைகுது மேலை நாட்டில்,
இந்தியா உணரா விட்டால்
அழிவினை எய்தல் திண்ணம்,

நடப்பதை நானை நாட்டில்
நடந்திடப் போவதைநீ
நடக்கட்டும் எனஇருந்தால்
நானைநின் வரலா றெல்லாம்
கிடப்பினில் பழங்கதையாய்க்
கேளாமல் போதல் கூடும்
அடிச்சுவ டேதும் காணு
தழுந்தியே புதைதல் கூடும்!

சாதியும் சமயக் காழ்ப்பும்
சாய்ந்திடும் வீண் செருக்கும்
மோதியுன் இனத்தையெல்லாம்
முரித்தன வெறித் தனத்தால்
ஓதிடும் நல்லெண்ணத்தை
உணர்த்திஞல் உணர்ந்தே உண்மைச்
சேதியை ஏற்றுக் கொள்க
செழித்திடும் இந்த நாடே.

பூங்காவின் அழகு கெட்டால்
புகுந்தின்பம் காண்பவர்யார்?
நீங்கள்இஃ தறியின் மக்கள்
விடுதலைக் கழுக்கம் காண்பீர்!
தாங்கிடும் அன்பே வாழ்க்கை.
தமக்குளே பிரித்துப் பார்க்கும்
தீங்கொன்றே அடிமைத் தன்மை
சேர்ப்பதும் அறிவீர் உண்மை.

நாடெனும் எழில்பூங் காவைக்
காப்பவர் நாமே, நம்மைக்
கேடெனும் பிளவுப் பேய்க்கால்
கேண்மையாம் பயிர்கள் தம்மை
ஆடெனப் பாழாய்க் கிற்றே,
ஆயின்என்? மறுமலர்ச்சி
ஊடெழும் அன்பின் ஊற்றால்
ஒற்றுமை மணக்கும் பூக்கும்.

# புரட்சியின் அடையாளம்

உழைத்துப் படைக்கும்
உரம்பெறும் கைகளே
புரட்சியின் அடையாளம்!
முழக்கிடும் புதுமை
உலகினை உணர்த்திட
முந்திடும் பெருஞ்சின்னம்!

கற்றறிந் தார்களின்
மெல்லிய கைகள்
தூவல் ஒன்றே தாங்கும்.
மற்றெதும் தூக்கி
வருத்திடல் இல்லை, என்
மதிப்பில் அவை தாழும்.

தச்சனின் கைகளைக்
காண்கிறேன், அன்னவை
கரடு முரடுகள்தாம், எனின்
தச்சுளி வாளினைத்
தாங்கி உரம்பெறும்
தகவால் மிக உயர்வே.

# மகனுக்கு

வந்தேறிகளின் கடையில்
இருக்கும் ஆடிக்
குவளைகளை வாங்கிட நீ
அலைந்திடாதே.

இந்தியத்தாய் மண்ணிருந்து
நீ விரும்பும்
எழில்மிகுந்த குவளைகளைப்
படைத்துக் கொள்வாய்.

முந்து பணக்காரர்களின்
வழி எனக்கு
முற்றிலுமே முரணாகும்
நான் ஓர் ஏழை.

மைந்தனே, தன்மானம்
தனைவிடாதே,
வறுமையிலும் நின்தேவைக்
குழைத்துண்பாயே.

# நிலமுடையீர்

உழைரை வளைத்துச்
சுரண்டிப் பிழைக்கும்
நிலத்தை உடையவரே!
சீரைத் தரும் நம்
இறைவன் உலகை
வாழ்வு சிறப்புறவே

யார்க்கும் ஈந்தான்
அன்புப் பரிசாய்;
என்றன் மொழிகேளீர்:
ஆர்க்கும் பசிக்குப்
பிடிசோ றுண்பீர்
அதற்கும் மேலாகப்

புதைக்கும் குழிக்குள்
வேண்டும் போது
போனால் போதாதோ?
அதையும் உங்கள்
உடைமைப் பிடிக்குள்
அடக்கப் பாராதீர்.

# வாழ்வருமை

நேற்று நாளை
எனும்பொழுதால்
வாழ்வை அளக்க
நினையாதே.

ஊற்ற மான
வாழ்விதுவோ
என்றும் அழியா
ஒன்றாகும்.

ஆற்றல் இளமை
அழியாமல்
புதுப்பித்தோங்கும்
அருமைத்தே .

# மலரே

கொழிக்கும் அழகின் மலரே
கொம்பிலிருந்து கொய்து,
விழிக்குள் மனத்துள் இனிக்கும்
வியப்பை அழிக்க நினையேன்.

அந்தோ இதனை உணர்ந்தும்
ஆவது அறிவேன் மலரே,
இந்த என்கை கொடுமை
இயற்றப் பிறந்ததன்றே.

வானம்பாடிக் கண்கொண்
டுன்னை, வனப்பைக் காண்பேன்,
நீநம்பாய் ஓ, மலரே
நிலத்தின் நெஞ்சக் கனல்நீ!

..........

நின்றன் இதழ்தான் சற்றே
நெளிந்தசைந்து வீசும்
தென்றல் காற்றில் துடித்தால்
சிந்தும் கண்ணீர் மழையே!

..........

எழுவாய், அதோ அக் குன்றில்
இளவேனில் காலம் பார்!
இழும் என் மொழியில் பாடல்
இசைக்கும் பறவை இனங்கள்.

விண்ணில் நாரைக் கூட்டம்
விரையும் வரிசை போலே
மண்ணில் ஓடும் ஓடை
மணிநீர் கரையில் எங்கும்.

காட்டு மலர்கள் காதல்
களிப்பைக் கண்ணில் ஊட்டும்,
வீட்டுப் பூக்கள் குழந்தை
விழியாய், இதழாய் மலரும்,

எழுந்து வாரீர் எங்கும்
இளவேனில் பெண் ஆடல்
விழுந்த வான்வில் கோடி
விளையாடல்போல் காணீர்!

# உருசியப் புரட்சி

மக்கள் பாடிடும் மாண்புடைப் பாடலால்
மகிழ்ச்சி நெஞ்சில் விழி்புறும்,
மக்கள் எத்தனைக் காலம் காலமாய்
மன்னர் தம்கதை கேட்குவார்?

மண்ணின் சூலிருந்து இன்ப ஞாயிறு
வானில் பேரொளி தந்தது!
விண்ணினின்று வீழ்வுற்ற மீன்களை
எண்ணி வெம்பிடல் ஏனடா?

தன்னைப் பின்னிய தளைகள் யாவையும்
தகர்த்தல் மாந்தன் இயற்கையே,
முன் இழந்தஓர் உரிமை நாட்டினை
வென்றிடாது இன்னும் வீழ்வதோ?

# நம் செயல்

செய்யும் செயலின் திறங்கள் தாமே
செம்மை வாழ்வைக் காட்டிடும்.
ஐய, வாழ்வை விண், மண் ஆக்கும்
ஆற்றல் யாவும் நின்னிடம்.

பெய்திவ் வுலகில் பிறந்த நாளில்
ஒளியும் இருளும் பெற்றிலை
எய்தும் நன்மை தீமை யாவும்
இயற்றல் காண் நம் செயல்களே.

# இறைக்காணை இடு

நெஞ்சுரத்தை எந்த அளவில்
நீவலுப் படுத்தியே
விஞ்ச வேண்டும் என்பதொன்றை
விளம்புவேன் நீ, கேளடா:

உனக்கென் றிறைவன் எதையும் விதிக்கும்
உரிமைகொள்முன் அடிமை உன்
தனக்கு விருப்பம் என்னவென்று
கேட்டுக் கொள்ள வேண்டுமே.

# தோழனே!

அன்புடைத் தோழனே,
நின்னுடை வாழ்க்கை
ஒவ்வொரு கணமும்
வெவ்வேறு ஓவியம்.

மதிப்பு மிகுந்த
புதுப்புதுப் பொருளை
ஊக்கத் தாலே
உலகுக் களிப்பாய்.

தேக்கம் என்பது
சிறிதும் இல்லை
இன்றும் நேற்றும்
ஒன்றாய்,

மாறுதிருக்குமேல்
உன்னுடைய வாழ்க்கை
நெருப்பொளி இல்லாமல்
அருமை இழக்குமே!

# முறையீடு

என்றோ எதையோ இழந்தவன்போல்
ஏன்நான் இருக்க வேண்டுமடா?
எனக்குக் கிடைக்கும் நன்மையினை
ஏன்நான் துறக்க வேண்டுமடா?
என்றோ நிகழ்ந்த துயர்எண்ணி
வருங்காலத்தின் நன்மைகளை
இன்று பெருமல் கவலையினுல்
ஏன்நான் அழுகை கொளல்வேண்டும்?
குன்ரு அமுதக் குரலிசையால்
கூவும் குயிலின் துயர்க்கதையைக்
கேட்ட பின்னும் குமுருமல்
குமையாதிருக்க நான்என்ன
பொன்ரு மலரா? சொல்தோழா!
பொங்கும் என்றன் பாட்டூற்றுப்
புகழ்கொள் இறைவன் முன்னிலையில்
பூரித் துவந்து மகிழ்கிறது.
வென்ரேன் அல்லா மீதுகுறை
விளம்பும் மீறும் செயல்ஒன்றில்
விரைகு தென்றன் பாட்டுணர்வு
விதியிஃதாகி விட்டதுவே.

அரும்பூஞ் சோலைக் கமுக்கத்தை
அழுகுப் பூவின் நறுமணமே
ஆராக் காதல் தென்றலுடன்
அடித்துக் கொண்டு சென்றதுவே,
அரும்பூஞ் சோலைத் தேன்மலரே,
ஐந்தாம் படையாய் மாறியதே,
அவலம் இதனின் வேறுண்டோ?
அழகே பகையாய் மாறிடுமோ?

அரும்பூ மலரும் காலமுமே
ஐயோ முடிந்து விட்டதுவே.
அழகுத் தோட்டத்து இசைக்கருவி
அறுந்து முரிந்து போனதுவே,
விருந்துப் பாடல் பாடியபல்
விதமாம் பறவைக் கூட்டங்கள்
கிளையிலிருந்து விரைந்தனவே.
எனினும், கேண்மைக் குயில் ஒன்றே
அருந்தும் தனது பாட்டிசையில்
தனிமை அமைதிப் பூங்காவில்
அருமைப் பறவை உணர்ச்சியலே
அயரா தியங்கப் பாடிடுதே!

இறந்து போவதிலே இன்பம்
இருந்தால் என்ன உயர்வுளது?
ஏதோ இன்பம் இருக்கும் எனில்
இன்னல் கடலில் மூழ்கியே நம்.
பரந்த உள்ளக் குருதியினைப்
பற்றி உறிஞ்சிக் கொள்வதிலே
படரும் இன்பம் துன்பன்றோ
பாவலன் என் உள்ளத்துச்
சிறந்த ஆடிப் பேழையிலே
சிந்தும் கண்ணீர் முத்துகளோ
சேர்ந்து துடிக்கக் கண்டிடலாம்
செப்பும் மொழிக்குள் அடங்காவே.
திறந்த என்றன் நெஞ்சத்தில்
மனஎழுச்சி, பேராவல்
தீக்கொழுந்தாய் மேலோங்கிச்
சிறப்புணர்ந்துக் காத்துளது.
பறவை என்னை, என்பாட்டைப்
பார்க்கக் கேட்க யாருமில்லை.
பாடும் உணர்ச்சிப் பாடல்தரும்
பண்ணின் நுண்மை அறிகிலரே.

# மறுமொழி

தொழிலில் திறமை இல்லாத
துப்புக் கெட்ட இனம்ஒன்று
சுழலும் உலகில் இருக்கும் எனில்
தோழரே நம் இனம் ஒன்றே.
விழிப்பிலாத நிலைமையிலே
வீழ்ந்திருக்கும் இனம் ஒன்றும்
இருப்பின் அஃதும் நம் இனமே;
வைக்கோற் போரில் இடிவீழ்ந்தே
அழிந்த யாழாய்ப் போனதுவாம்
இனம்ஒன் றஃதும் நம்இனமே;
அந்தோ முன்னோர் புதைகுழியை,
அகழ்ந்து விற்று வாழும் இனம்
ஒழியா துள்ள தெனில், அதுவும்
நந்தம் இனமே; கல்லறையை
ஒழுங்காய் விற்று வாணிகம்செய்
உரமும் உயர்வும் பெற்றுள்ளீர்.
தொழுகை செய்யும் உங்கட்குத்
தோன்றாத் துணையாய்ச் சிலைகிடைத்தால்
விற்கும் கலையில் தோற்பீரோ ?
தொன்மைக் காலத் துழல்வோரே!

செழித்த பூந்தோட்டக்காரா,
சிறந்த தோப்பின் சிதைவுற்ற
சிறுமை கண்டு கவலையுறேல்
சிதைந்த கிளையின் கோப்பிருந்து
விழிக்கும் குழந்தைக் கண்ணொளிபோல்
விண்மீன் உமிழும் மாலொளிபோல்
விரிந்து நறுந்தேன் மலர்பூக்கும்
காலம் விரைந்து வளர்கிறது.

கொழிக்கும் பூந்தோட்டத்திருந்து
குப்பை கூளம் அகன்றுவிடும்
காலம் கனிந்து வருகிறது,
குமைந்து தம்மை இழப்பவர்கள்
பொழிவார் தங்கள் குருதியினைப்
பூக்கள் ஆகும் உயிரூற்றே,
புலரும் அந்தப் புத்துணர்ச்சிக்
காலம் விரைந்து வருகிறது.
விழிப்பாய் நிறத்தைக் கண்டிடுவாய்
விரியும் சிவப்பும் கறுப்புங்காண்
வியக்கும் பரிதி உதயத்தை
விளம்பும் விடியல் பேரொளி பார்!

பூவின் அரும்பில் இருக்குமணம்
போல்ஏன் சிறைப்பட்டிருக்கின்றாய்?
பூரித் துவந்து பரவிவிடு!
புறப்பட்டெங்கும் கலந்துவிடு !
காவின் தென்றலுடன் கூடிக்
காற்றுலாவும் இடம் எங்கும்
கமழ்ந்து கலந்து புகுந்திடுவாய்,
கருதும் அணுவாய் இருந்தாலும்
யாவும் வீழும் பெரும்பாலை
வனமாய் எங்கும் மாறிவிடு;
அலையும் இளங்காற்றாகிய நீ
ஆற்றல் புயலாய் ஓங்கிவிடு!
தூவும் அன்பின் வன்மையினால்
துடிக்கும் உண்மை உணர்ச்சியினால்
துகளை யெல்லாம் உயர்வாக்கு,
புகழின் முகட்டில் தூக்கிவிடு!
தேவ தூதன் திருப்பெயரைத்
திருந்து வாழ்க்கைச் செய்தியினைத்
திசையனைத்தும் ஒளிரச்செய்
செம்மை யாகும் இவ்வுலகே!

# ஓய்வு

நிலவின் ஒளி தண்ணென்று
மெல்ல வீசும்
நெடுமரங்கள், செடிகள் அசை
வற்று நிற்கும்.

இரவு மகள் மடிபுதைந்தே
இளைப்பாறல் போல்
இயற்கையதும் அசைவின்றி
ஓய்ந்திருக்கும்.

# பரிதியும் கதிரும்

ஒருநாள் பரிதி தன்ஒளிக் கதிர்களைத்
திரும்பவும் தன்னிடம் வருகவென் றழைத்தது;
நிலவுல கதற்குப் பொருந்தாதென் றது;
பகலும் இரவுப் பொழுதுகள் அனைத்தும்
வஞ்ச மனத்தின் வடிகால் என் றது;
ஒளியினை வெளிப்படச் செய்வதால் இன்பக்
களிப்பிலை என்று கழறிய கணத்துள்,
உலகினில் மூலை முடுக்கினில் ஒளிர்ந்த
இலகொளி அனைத்தும் இரவியின் மடிக்குள்
வந்து புகுந்தன, ஒடுங்கின; மற்றவை
புடவியின் கொடுமையை எடுத்தியம்பின.
ஆனால்,
அழகிய ஒரு கதிர்க் கற்றை
நிலத்திலிருந்து திரும்பிட மறுத்தது;
நிலத்தின் இருட்டில் நின்றே ஒளிவிட
ஒப்புதல் வேண்டி உரிமை கேட்டது.
இந்திய நாட்டின் அருமை பெருமையைச்
சந்தத் துடனே தென்பாங்கிசைத்தது.
பெரும்பணி பலவுள என்று பேசிற்று.
கோயிலின் வாயிலில் அந்தணன் உறங்குவான்,
மசூதியின் மடியில் மண்டி இட்டு
முசுலிம் பெருங்குரல் முழக்கம் இடுகிறன,
ஏசு மதத்தினன் பேசுவான். ஏசுவான்.
உலகம் அனைத்தையும் விழிப்புறச் செய்வதும்
இருட்டினை விலக்கி ஒளிபெறச் செய்வதும்
என்னுடைக் கடனே, எனக்கிட்ட ஆணையே.

# கட்டுப்பாடு

கட்டுப் பாடெனும் விதியினால்
கசியும் நீர்த்துளி பெருகியே,
மட்டுப்பாடிலா ஆழியாய்
மாறுதல் உலகியற்கையாம்.

நுண்மண்ணின் துகள் கூடியே
நூறு நூறு நூறாயிரம்
வண்மைப் புன்செயாய் நன்செயாய்
வனங்களாய்ப்புகழ் பெற்றிடும்.

கட்டுப்பாட்டினால் யாவுமே
கலந்துரம்பெறக் கண்டும்நீ
கட்டுப்பாடதன் ஒற்றுமைக்
கண்ணியில் முடிச்சவிழ்த்தல் ஏன்?

# எஞ்சி நிற்பவை

உலகில் பொதுமை நிலைபெறல் ஒன்றும்
மாந்தருள் ஒற்றுமை ஓங்குதல் ஒன்றும்
வலுவுற வில்லையேல் மலராதுலகே!

நாடு, மொழி, இனம் கேடுசெய் பொருள் இவை
ஊடு புகாத உண்மையும் அன்பும்
சிதைந்ததால் அனைத்தும் சிதைந்து நிற்கின்றன.

உடன்பிறப் பாண்மையின் கடைக்கால் தகர்ந்தது;
குறுகிய தேசியம் வெறிகொண் டெழுந்தது;
நாடுகள் ஆங்கதன் நச்சுவாய்ப் பட்டன.

மாந்த இனமெலாம் ஏந்துபோர்க் கூட்டமாய்ப்
பதறியும் சிதறியும் பாழாய்ப் போயின.
மக்கள் இனக்கதை சிக்கல் மிகுந்த
தொல்பழங் கதையால் தொல்லையுற்றது.

ஒருவர்க் கொருவர் வேற்றார் ஆயினர்,
உள்ளுணர் வனைத்தும் ஓடிப் போயின
வெளிப்பொலிவு ஒன்றே எஞ்சி நின்றது.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று
ஓதும் ஒருமொழி ஒழிந்தே விட்டது.
ஈற்றில் எஞ்சி நாற்புறத்துள்ளவை
வேற்றுமைப் பட்ட தேசிய இனங்களே.

# அடைபட்டால்...

மலரின் மொக்கில்
காற்றடை பட்டால்
மணத்தைப் பெறுகிறது;
கலைமான் கொப்பூழ்
அடையும் கந்தம்
மான்மதம் ஆகிறது.

அலைக்கும் கடலில்
சிப்பிக்குள் மணல்
அணிமுத்தாகிறது;
நிலைக்கும் மாந்தர்
அன்புறு நெஞ்சால்
தேயம் மணக்காதோ?

# ஓடிக்கொண்டிரு

எல்லையிலா ஆர்வமெனும்
பெரும் பரப்பில்
ஓர் உயிர் நீ, எப்போதும்
தொடரும் தொல்லை.

தொல்லைகண்டு துவளாதே,
காதல் நங்கை
துணைகண்டும் ஆறுதலைக்
கொண்டிடாதே.

மல்லிகையின் பெருக்கென்னும்
மணி ஓடை நீ,
மாபெரிய கடற்பண்பே
உனக்குள் உண்டு.

நில்லாமல் ஓடிக்கொண்
டிருக்கவேண்டும்.
நிறையுழைப்பை எப்போதும்
நிறுத்திடாதே.

வல்லவனே, இடையினிலே
எதனைக் கண்டும்
கரையென்று கருதாதே
வலிந்துழைப்பாய் !

# நீ

தோன்றுக என்ருர் ஆண்டவனுர்
தோன்றினை நீயே மானிடனுய்;

காண்பதற் கியலாக் கடவுட்கே
கண்படும் சான்று நீயுலகில்;

விரிந்தஇவ் வுலகில் மாந்தன்றின்
விரிபெரு வலிமைக் கிணையில்லை;

உறுதியாய் நீ,கால் ஊன்றிநட!
உறுதியாய் வாழ்வு செழித்திடுமே!

# சார்பு

சமுதாயத்துடன் தனிஓர் மாந்தன்
சார்ந்தால்
வாழமுடிகிறது
சமுதாயத்தினை விட்டால், மாந்தன்
தனியாள்,
செயல்கள் அற்றவனே.

கடலின் அலைகள் கடலுள் இயங்கின்
காட்டும்
வலிமைக் கிணையில்லை;
கடலின் அலைகள் கடலை விட்டுக்
கரைசார்ந்தால்
மணல் உறிஞ்சிடுமே.

# பாட்டு

மாந்தனின் வெற்றி தோல்வியை, மண்ணில்
ஏந்திய கதையை இயம்புதல் பாட்டு;

துன்புறு நெஞ்சின் துடிப்பே பாட்டு;
முறையீட் டுரையின் முனைப்பே பாட்டு.

குறித்தலோர் சமூகக் குறைகளை ஆய்ந்து
நெறியுடன் எழுச்சி, நிரம்பு பட்டறிவுக்
கலைமனத் தோடது கனன்றுல்
உலகுக் கதுவே உயிர்நிலைப் பாட்டாம்.

# உண்மைகேள்

குற்றம் என்றுநீ கொள்ளவில்லையேல்
கூறும் உண்மைகேள் பார்ப்பன!
பற்று கோயிலின் சிற்பம் யாவுமே
பழமையாகவே போயின.
சுற்றத்தார்களே தூற்றிடும்வழி
கோயில் சூழலை ஆக்கினை.

பள்ளி வாயிலில் தெய்வப் போரினால்
பகைமை மூட்டியே போதகன்
கொள்ளும் சோர்வினால் இரண்டுகோயிலைக்
குறுகும் உள்ளமே கொண்டிலேன்.
விள்ளும் நல்லுரை அறிவுக் கதைகளை
வெறுத்த கன்றுபின் வாங்கினேன்.

எனக்கென் தாயகத் துகள்கள் யாவுமே
இறைவன் வடிவமாய்த் தோன்றுமே;
மனம் துணிந்துவா, வேற்றுமைத்திரை
வானில் ஏறிடத் தூக்குவோம்.
இனம் மதம் என நமை விலக்கிடும்
இரண்டு பட்டதைத் தள்ளுவோம்.

அன்பும் அமைதியும் நல்ல பத்தனின்
ஆழ்ந்த நெஞ்சில்வாழ் பாட்டடா,
தென்புடன் சொல்லும் வணக்கம் உண்மையின்
தெளிவுணர்த்திடும் அன்படா!

# நெஞ்சின் துயர்

என்னுடைத் தாயக மக்கள் அனைவரும்
அன்பின் கழுத்தைத் தாம்மறந்தார்,
இன்றதோ வாழ்க்கையின் போர்க்களம் தன்னில்
இயலாத மாந்தராய் மாறிவிட்டார்.

ஒருமைக்கு மாறாகப் பிரிவின் உணர்ச்சியே
ஓங்கும் புயல்எனச் சூழ்ந்திடுதே,
ஒருநெறிக் குவியலே ஓராயிரமாயின்
உள்ளத்தி துன்பம் வலுக்கிறதே.

அஞ்சிய நாள்கள் என் கையருகேமிக
ஆர்த்துக் கிளர்ந்து நெருங்கினவே,
நெஞ்சின் துயர்எலாம் வாழ்வின் வரலாற்றில்
நீக்கப்படுகின்றோம் என்றனவே.

# விருப்பம்

வாழ்வின் சுவையைத் தெரியாதவனே
விருப்புற்றெழுந்திடுவாய்,
தாழ்வை வெறுத்து விருப்பென்னும் மதுத்
தணலை விழுங்கிடுவாய்!

எழும் ஞாயிற்றைப் போலே ஒளிரும்
ஆர்வம் இணைத்திடுவாய்,
முழுவான் விரிவின் மேலாய் விருப்பம்
முட்டித் ததும்பட்டும்.

உள்ளம் தன்னை இன்பக் கூத்தில்
ஊக்கல் விரும்பமடா!
உள்ளம் தன்னை ஆடியைப்போல்
ஒளிர்த்தல் விருப்பமடா!

வாழ்வை வளமைப் படுத்துவதனைத்தும்
மாசில் விருப்பமடா!
வாழ்வில் சுடர்விடும் மாந்தர் அனைவரும்
விருப்பின் வலைஞரடா!

விருப்பம் என்னும் ஒன்றினால்தான்
மாந்தன் வாழ்கின்றான்,
விருப்பம் இன்றேல் நெருப்பில்லாத
விளக்காய் வீழ்ந்திடுவான்.

# விழி - எழு!

எழுவாய் அட, எழுவாய் விதி
ஏட்டைக் கிழித்தெறிவாய்
விழிப்பாய் அட, விழிப்பாய் புது
மலர்ச்சிக்கனல் விளக்கே.

துடிப்பின் ஒளி தொடர் வாழ்வினில்
சுடர்ந்தோங்கிடச் செய்வாய்,
குடியேற்றிடு குறிக்கோளினைக் ,
கண்ணின் மணிக்குள்ளே !

கொடுங்கோன்மையின் போரின் வெறிக்
குரலின்வலை கிழிப்பாய்,
மடுக்கும் அமை திக்கோர் இசை
மதுப்பாய்ச்சுவாய் செவியில்.

உயிர்த்தோழமை எனும் பண்ணினை
யாழில் இசை சேர்ப்பாய்,
உயிர்காத்திடும் அன்பின் மது
உவந்துண்டிட வார்ப்பாய்.

வாழ்வார்க்கெலாம் பொருளின் பொது
வுடைமை உழைப்பருமை
சூழ்ந்தே நலம் துய்க்கும் நிலை
உலகில் வரவேண்டும்.

மாந்தர் இனம் முற்றும் முதிர்
மணிநெல்வயல் என்றால்
மாந்தன் மையே வெற்றிப்பயன்
மதிப்பார் அறுவடையாம்.

நீயே உயிர்க் குலத்தின் கொடு
முடி நீ கலை முடிவு!
நீயே படைப்பாற்றல் கரு,
நிகரில் குறிக்கோளாம்!

# அனைவரும் உறவினர்

நாங்கள் அனைவருமே – இந்த
நானில
மீதினிலே
தேன்கமழ் பாங்கிதழ்கள் – பல
சேர்ந்தநல்
செம்மலரே
ஓங்கும் மலர் ஒன்றுதான் – எம்
உள்ளொளியும்
ஒன்றுதான்

பேசும் மொழி பலவாய்
பேணும்
நிறம் பலவாய்
தேசம் பலஎனினும் – சிலர்
மாந்தர்
எனும் பெயரால
வாச மலரிணைப்போல் – மண்ணில்
யாவரும்
ஒன்றல்லரோ?

# சோர்வு நீக்கு

எத்துணை எத்துணைக் காலம் – அட
வாழ்க்கை எனும் உடைதன்னைப்
பொத்தலும் கந்தலுமாக – நீ
போட்டு நலிந்தழிகின்றாய்.

புத்தம் புதிய மணமும் – இன்பம்
பொலியும் ஒளிமிகு வாழ்வும்
இத்தரை எய்திட வேண்டும் – வாழ்வில்
இன்மலர் பூத்திட வேண்டும்.

பொத்திக் கொள்ளாதே நின்கண்ணை – அகப்
புலரி விடியலைக் காண்பாய்!
மெத்தச் சிறந்த ஓர்பொருளை–வாழ்க்கை
மேவிட ஆக்குவாய் தோழா!

# சிறந்தோன்

ஓடும் குருதியில்
நெருப்பின் அலைகள் பாய்ந்தாற்போல்
பாடும் பாடலில்
காதல் வேட்கை படரட்டும்;

பாடு பொருளில்
குறிக்கோள்கள் அற்ருல் பாட்டேது?
தேடும் பொருளாய்ப்
பாட்டானுல் அதில் தீயேது?

கலையில் சிறந்தோன்
இயற்கை அனைத்தும் கைக்கொண்டு
வலைச்சொற் குள்ளே
குறிக்கோள் வாழ்க்கை வனைக்கின்ருன்;

நிலைபெற்றிடும் ஒரு
புத்துலகத்தை நிறுவுகிருன்;
அலைமேல் அலையாய்
மலைபோல் வளர அருள்கின்ருன்.

# பெண்மையே !

பெண்மையே தெய்வீகமே – மொழி
பேசரியாப் புகழே !
மண்ணில் எம் இயக்கம் எல்லாம் – நின்
வாழ்வால் நடப்பவையே.

எண்ணும் எம் எண்ணமெல்லாம் – நின்
ஏற்றம் அமைப்பவையே.
பண்ணும் தொழில்கள் எல்லாம் – நின்
பண்பால் இயங்கிடுமே.

கண்ணாய்ச் சமுகத்தினை – என்றும்
காப்பவள் நீயல்லவோ
மண்எனும் ஓவியத்தை – எழில்
மாண்புறச் செய்பவள் நீ.
பெண்மையின் அன்பிசையே – வாழ்க்கைப்
பேரிசைப் பண்ணரங்காம்.

# ஓர் ஐயம்

அந்தோ இரவெலாம் ஆடி ஓடிச்
சந்து பொந்தெலாம் சிந்து பாடினும்,
படாத பாடெலாம் பட்ட போதினும்,
அடேஎனக் கொருதுளி குருதியே கிடைக்கும் ;
ஆனால், ஐயகோ முயற்சியே இல்லா
மேனா மினுக்கிகள், தாமாய் ஒருசிறு
முயற்சியும் இன்றிப் பெயர்ச்சியும் இன்றி
இருந்த இடத்தில் இருந்த படியே
வட்டிக்கு விடுகிற கெட்டிக்காரர்கள்,
கடன்காரன் குருதி உடலின் இலாவணம்
உறிஞ்சி விடுகிறார் எப்படி ?
வருந்தியது இங்ஙனம் திரிந்திடும் கொசுவே.

# வேங்கை நெஞ்சம்

அடிமைத் தளையில்
சிக்குண்டிருக்கும்
அல்லல் பொழுதினிலே,

வடிவார் வாள்களும்
வலிமைத் திட்டமும்
வரிசைப் படுவதில்லை.

இடியே றனைய
வேங்கை நெஞ்ச
உறுதி இணைந்துவிடின்,

பொடிப் பொடியாக
விலங்குகள் தகரும்
வீரம் பொலிந்திடுமே.

# முழங்காதே

விரிவான கதிரோனை ஒளிமீனைத்
தமதாட்சி வினையாளுவார்,
பெரிதான விதியானை தனைத்தானே
சிறையூடு பிணிக்கட்டுமே.

விழியாக ஒளிவிண்மீன் குறிக்கோளை
மனம்கொண்டு விரைந்தோடுமே,
வழியான தனதானை விதியோடு
தலைதாழ்த்தி வளைந்தோடுமே,

பழங்காலப் பழக்கத்தின் வழக்கத்தின்
விடுவுற்ற பலங்கொண்டவை,
சுழன்றாலும் சுடர்வெள்ளித் தலையாலே
துணைப்பாதம் தனைச்சூடுவாய்.

முழங்காதே விதியானை கொடிதென்று
முடிவற்று முழங்காதே நீ.

# பெண்ணே

முகத்தினில் அருளினைத்
தேக்கிடுவாய் – பெண்ணே
முத்தொளி கூட்டிநீ
வாழ்த்திடுவாய் !

அகத்தினில் அன்பினைத்
தேக்கிடுவாய்-மொழி
அமிழ்தினை ஊற்றெனத்
தந்திடுவாய்.

பண்புக் கெல்லாம் முதல்
ஆகிடுவாய்–இந்தப்
பாருக்கெல்லாம் முதல்
நீயல்லவா ?

பெண்மைக் குரியநல்
நாணங்கொள்வாய்–அன்றேல்
பித்தூட்டும் மார்பிலா
மங்கையன்றோ ?

# பெண்மை

ஆண்மை என்னும் யாழில் – இசை
அமிழ்தைப் பொழிவது பெண்மை,
மாண்பைத் தருபவள் அவளே – ஆண்
மானம் காப்பவள் அவளே!

.........

சமுதாயத்தின் ஆற்றல் – உலகச்
சமுதாயத்தின் மேன்மை
சமுதாயத்தின் வாழ்வு – அனைத்தும்
தாங்கி நிற்பது பெண்மை!

வாழ்வின் கமுக்கம் எல்லாம் – நம்மில்
வகைப்படுத்தல் பெண்மை.
வாழ்வின் உணர்ச்சிச் செயல்கள் – பலவும்
வகுத்தளிப்பதும் பெண்மை.

உள்ளம் என்னும் குளத்தில் – நீரின்
உணர்வும் உணர்ச்சியும் பெண்மை.
வெள்ளத்து அலர்ந்த மலர்கள் – நம்
வீர மரபினர் என்பேன்.

கூரிய சீரிய பார்வை – தமைக்
கொண்டவள் நாட்டின் செல்வம்;
ஈரிய நெஞ்சம் உடையாள் – அவளே
எச்செல்வத்தினும் மேலாம்.

ஆண்மை சமுகத் தொருதூண் – அதன்
ஆற்றல் மேன்மைக்குதவும்
தூண் மற்றொன்றுண்டதுவே – வாழ்க்கைத்
துணையாம் பெண்மை, பெண்மை!

# பெண்மைக்கழகு

பெண்ணுக்கு அழகுநல் தாய்மை – அதைப்
பெற்றிலளேல் அது நோய்மை,
பெண்ணே நல் பிள்ளைகள் பெற்று – நின்
பேரன்பு மார்பிடைப் பற்று.

செவிலியர் கையில் தராதே – தந்தால்
சேயும் நன்கு வளராதே ;
குவிந்த மலரிணைப் பின்றேல் – சுடர்
கொள்ளா விளக்கதுவன்றோ?

தோழியரிடம்நீ கொடுத்துப் – பிள்ளைத்
தொல்லை குறைந்ததாய் விடுத்து,
வாழ நினைத்திடல் வேண்டா – பிள்ளை
வளர்ச்சியினை அது தூண்டா.

பிற்காலத்துங்களின் பிள்ளை – பெறும்
பேறில்லை, வாழ்விலே தொள்ளை;
சிற்றுண்டிச் சாலையில் உண்டு – நோய்
சிதைத்திடச் சாவானே மண்டு.

# மகளே

மகளே, மகளே, தகவல் இஃதறிக:
பிறந்தநின் மக்களின் சிறகுகள் நன்கு
முளைத்து வலுப்பட்டு முற்றிடும் முன்னே,
கிளைக்கூடு இழந்தனர், கிடைக்கும் அன்பினை
இழந்தனர், இரையினை இழந்தனர், அந்தோ
வெகுதொலைவில்போய் விழுந்தழுகின்றனர்.

அவல நிலைக்கெலாம் அன்புத் தாயே
உவப்புறும் அக்கறை உன்னிடம் இன்மையே.
உன்னிடம் எண்ணத்துயர்வுகள் உண்டே,
அன்னைக் குரிய ஆர்வம் உண்டே,
நபிமணி அருந்தவச் செல்வி பாத்திமா
தவத்திற வாழ்க்கையை மறந்துவிடாதே.

உன்னுடை குருதிக் கிளையிலிருந்து
தென்புடை வீரன் மின்னேறு இடியெனக்
குதித்தெழ வேண்டும், குளிர்மலர்க் காவில்
இளவேனில் நலமெலாம் இங்கு
வளமுறச் செய்ய வரவேற்கின்றேன்.

# சிறகுகள் உதறு

சமுதாயம் எனும்
தன்னிகர் இல்லாச்
செம்புட் பறவையே
உன்மீதில்,

சுமைசுமை யாக
வேற்றுமை என்னும்
தூசு நிறைந்து
படிந்துளதே.

இமைக்கும் முன்னர்
சிறகுகள் உதறி
எழுவாய் உயர்வில்
எழுவாயே!

# ஆற்றல்

எவன் ஒருவன் இவ்வுலகில்
தன்னுள் ளத்தே
இருக்கின்ற பண்புகளை
அறிகின்றானோ,

எவன் ஒருவன் தனக்குள்ள
திறமை தன்னை
எழுஞாயி றாகத்தான்
உணர்கின் றானோ,

எவன் ஒருவன் பழமையிலே
புதுமை வித்தை
இங்கங்கும் எவ்விடத்தும்
இறைக்கின்றானோ,

அவன் ஒருவன் இறையொளியின்
முகவன் ஆவான்;
அவனாற்றல் எவனாலும்
தடுக்கொணாதே,

# காதல்

சிவப்பு வண்ண
மலர்கட்கெல்லாம்
செம்மை கொடுப்பது
காதல்.

உவர்ப் புணர்ச்சிச்
செடிகட் கெல்லாம்
தேனை உதவுதல்
காதல்!

மண்ணுல் ஆன
மாந்தர்க்கெல்லாம்
உயிரை மடுப்பது
காதல்.

பெண் ஆண் தம்மைப்
பிரித்தால் தெரியும்
பெருகும் குருதிக்
காதல்.

# காதலாற்றல்

காதல் நெஞ்சுக்கு இணையே இல்லை
கமழும் உணர்ச்சிகள் எல்லாம்
காதல் குரற்குக் கட்டுப் பட்டே
கனிந்து பணிந்து நடக்கும்.

பூவரசம்பூ காதல் நெருப்பால்
பொன்நெஞ் சாக மலரும்,
ஏஏ ! வைரக் கல்லில் நெஞ்சம்
எரிதீ துளியும் இல்லை.

வாழும் உலகில் செலவு மட்டும்
வருவாயோடு பிறக்கும்,
சாவும் வாழ்வில் பின்னிக் கிடந்து
தளிர்க்கும் படைக்கும் புதுமை.

காதல் வீணையில் மாந்தன் வாழ்வின்
கைகள் மீட்டும் கம்பி,
ஆதல் அழிதல் இரண்டினும் மாந்தன்
ஆண்டவனோடும் வெல்வான்.

வாழ்தல் இருத்தல் எத்தனைப் பெரிய
இன்பம் வையம் தனிலே,
சூழும் ஒவ்வோர் அணுவும் நகைத்துயிர்த்
துடிப்பால் மலர்ந்து மகிழும்.

அன்புக் காதல் ஆற்றல் அருமை
ஆர்வம் எதையும் பேசேல்,
உன்றன் காதல் நெஞ்சில் பொறித்தீ,
நாவில் பாட்டுக் கடலே.

# செம்மலர்

காலை இளங்காற்றுப் பூங்கொடிகள் தம்மைக்
களித்திடும் தொட்டிலாய் ஆக்கிடுமே!
சோலையிலே முகை மொட்டுகள் இன்னுயிர்
சொக்கித் க ளித்தசைந்தாடிடுமே!

மலர்கள் தம் செவ்விதழ் நாவினுல் அமைதியைச்
செம்மொழி ஆக்கிப் புகன்றனவே;
மலர் கொய்வோனின் கை அதிர்ச்சியை நாங்கள்
மறந்தும் நுகர்ந்திலோம்'' என்றனவே.

.........

குன்றின் மடியினில் கொஞ்சும் சிலம்பொலி
கொண்டுசிற் ருேடைகள் பாடிவரும்;
குன்றியே நாணிடத் தெய்வப் புனலாற்றுக்கு
ஒப்பின்றி கூத்தில் மகிழ்ந்திடுமே.

இயற்கையின் காதலி முன் அது கண்ணுடி
யாக எழிலுறத் தோன்றிடுமே;
செயற்கையின் சித்திரக் காட்சிக்கெலாம் அது
சிந்தனை ஊற்ருக ஊன்றிடுமே.

சிற்சில வேளை வழிபடும் கல்லினைச்
சேரா தகன்று விலகிடுமே,
சிற்சில வேளையில் கல்லினில் மோதிச்
சிறப்புடைப் புள்ளென ஓங்கிடுமே.

சிக்கல் மிகுந்த கடுமைத் துயர்களைத்
தேர்ந்துணரும் திறம் கொண்டிலை நீ,
செக்கச் சிவந்தநல் செம்மலரே அகச்
சிந்தனை ஏதும் உனக்கிலையோ?

# வளர்பிறை

செங்கதிர்த் தோணி கவிழ்ந்தது
நீல்நிற ஆற்றிலே – அதன்
அங்கப் பலகை மிதந்ததே
ஆற்றெழில் ஊற்றிலே.

வான ஒளித்தட்டில் மாலை
வடித்தது செங்குருதி – இயற்கை
ஆன சுடர்வாள் ஞாயிற்றின்
ஆகம் பிளந்ததுவோ ?

மாலை எனும்மணப் பெண்ணின்
மணிக்கதிர்க் காதணி – வானம்
மேலைத் திசையில் களவாடி
மெல்ல மறைந்ததுவோ ?

நீலப் புனலாற்றில் பொன்னின்
நிறங்கமழ் தங்கமீன் – இன்பக்
கோலப் புதுமையாய்க் குதித்து
கூத்திட்டு உலவிற்றோ ?

# விடிவெள்ளி

எண்ணும் எண்ணம்போல் மாறும் ஆற்றல்கள்
என்னிடத்திலே வாழ்ந்திடில்
விண்ணில் மின்னியே கண்சிமிட்டிடும்
வெண்பொன் ஆகநான் வாழ்ந்திடேன்,
மண்ணைச் சூழ்ந்திடும் மாக்கடல் மடி
மலரும் முத்தென மின்னுவேன்.

இன்பமே மிகும் இந்த மண்ணினில்
இனியதோர் மலராக நான்
அன்பனே உருக்கொள்ளுவேன் எனில்
அம்மலர் இதழ்க் கடையினில்
நன்பனித்துளி முத்தமாகவே
நான் சிரித்திட வேண்டுவேன்.

தாயகத்தினைக் காக்கச் சென்றிடும்
தருக்கு மேவிய வீரனின்
நேயமிக்குடைக் காதல் நங்கையின்
நெஞ்சின் பீடுறு நினைவுகள்
தோயும் வாள்விழித் தளும்பும் புன்கணீர்
தோற்றம் கொண்டிட வேண்டுவேன்.

விழுதின் வாலென விண்ணகத்திலே
கங்குல் வேளையில் வாழ்வதா?
புழுதியில் கலந்தொன்றும் மக்களின்
பொன்னுழைப்பினுல் வாழுவேன்,
கொழுந்து விட்டெழும் காதல் தீயதன்
கொழுமை யாவையும் கூட்டுவேன்.

# அழகின் உண்மை

உலகம் ஓர் சித்திரச்சோலை – அதில்
ஒப்பற்ற வாழ்க்கையே
வண்ணப்பூஞ் சோலை!
இலங்கும் இரவெனும் பாட்டு – உயிர்
இசைத்திடும் வெவ்வேறு
தாளங்கள் போட்டு!
..........

தோற்றங்கள் மாற்றங்கள் கொள்ளும் – பல
தொல்எழில் வண்ணங்கள்
தேனொடு விள்ளும்!
மாற்றங்களால் எழில் வீழும் – அந்த
மாற்றங்களாலேயே
புத்தெழில் வாழும்.

# மாணவர்க்கு

நாளெல்லாம் இயங்குவதே
நமது வேலை,
நல்லாறுய் ஓயாமல்
இயங்கும் வேலை.

கோள்எல்லாம் அசைவனவே
அமைதி இல்லை,
கூறுகின்ற அமைதியென
ஒன்றும் இல்லை.

தோழர்களே, இரவென்னும்
கதிர் அறுக்கும்
துடிப்புடைய உழைப்பினரே,
உலக வாழ்க்கை

வாழல் எனும் இயக்கத்தால்
அசைவால் உண்டாம்;
மண்ணுலகு மாண்புலகம்
இயக்கத்தாலே.

# துன்பக் கோட்பாடு

துன்பம் இளைஞனை
இன்கன விருந்து விழித்தெழச் செய்யும்

.........

காதலி யோடு காமுறும்
காதலும் சாதலில் கலப்பது இல்லையே;
துன்பினைப் போலது
அன்புறு நெஞ்சில் அகலாதிருந்திடும்.

.........

அசைந்து செல்லும் வாழ்க்கை ஆற்றின்
இசையும் ஒன்றே, இயல்பும் ஒன்றே.
மலையிலிருந்து நிலைபெயர்ந்த
அருவியாய் நம்முன் மறுவியுள்ளது.

நாம் பிரிகின்றோம்
ஆம், பின் உலகின் அகன்ற மடியில்
நாடித் தேடிக் கூடிக் களிக்கவே.
ஆனால்,
சின்னேரப் பிரிவினை எண்ணி
எந்நேரமும் நாம் கண்ணீர் பொழிவதா?

# மொழுகுத்திரியும் பாவலனும்

நான் எரிகின்றேன் ;
ஏன்எனில், எரிவது என் இயல்பு.
மின்மினி நீயோ வெளிச்சம் தருகிறாய் ;
விட்டில்கள் உன்னை விரும்பிக்
கட்டுப் பாடிலாக் காதலில் கலப்பதெங்ஙனம் ?

......

உள்ளத்து உள்ளது உன்னுடைக் கோயில்;
எனினும், சிலைகளை இனிதுஎன வேட்கிறாய்,
பொறுப்பிலா வேட்கை கிறுக்குத்தனமே.
நின்றன்
அரண்மனை இருந்தோர் ஆட்டனத்திஎழல்
முடியா ஒன்று.

நின்றன் பாலைவனம் குறுகிய ஒன்று.
நின்றன் தொட்டிலில்
ஆதிமந்தி காதல்கொண்டு எழுவளோ ?
எனினும், இரவின் இருளில்
நம்பிக்கை ஒளி எம்பி எழுகின்றது.
பெற்றுக் கொள் இதை – மீண்டும்
அஃதோர் அரும்பெரும் செல்வம் ;

உன்னுடைய உள்ளம் உனக்கே
மாறாய் இருப்பின் வாழ்க்கை சீர்ப்படுமா ?

......

ஏஏ ! யாரைத் தேடிநீ அலைகிறாய்
நீயே வழி, ஆம் ;
நீ வழிப்போக்கன், நீ வழிகாட்டி ;
நீயே வாய்த்த குறிக்கோள் ஆவாய் !

# மக்கள் எழுச்சி

விண்ணின் மீன்கள் பொலிவிழத்தல்
விடியலுக்கோர் அறிகுறி,
மண்ணின் மாட்சி தெரிக்க வானில்
கதிரவன் கீழ் எழுந்தனன்.

ஆழ்ந்த துன்ப ஊழி மாறி
அடடே, வேங்கைப் பாய்ச்சலாய்
வீழ்ந்த கிழக்கின் நரம்பினூடே
வெங்கனல்தீ பாய்ந்தது.

சீனநாடும் அரபு நாடும்
தெரிகிலாத ஒன்றுகாண்;
வானும் கடந்த ததுதான் மாந்த
வாழ்வின் குறிக்கோள் ஆகுமே.

.........

நீ எழுப்பும் துகள் அனைத்தும்
நிறைந்த விண்மீன் ஆகுக.
வாழ்வெழுப்பி உலகினுக்கு
வழிவகுத்துச் செல்லுக.

மக்கள் கொண்ட எழுச்சி முலம்
உண்மை மண்ணில் தெரிந்தது,
ஒக்க இந்த உலகினுக்கே
உரிய காவல் நாமடா!

# இறைவனே !

இறைவனே என் மார்புக் கூட்டினுள்
எதையும் அறிந்திடும் நெஞ்சைத் தந்தருள்;
நிறைந்த மதுவில் திளைத்தே நினைவுகள்
திரம்பும் விழிகளை உவந்தே ஈந்தருள்.

..........

தாளூ தின்ஒளிப் பாட்டின் ஆற்றலால்
தரையின் புழுதியை ஒளிவிளக் காக்குக ;
நாளூ றும்சுவை மதுவின் ஒவ்வோர்
அணுவிலும் தீயின் கனலை ஏற்றுக.

.........

என்றன் நாட்டின் மூங்கில் காட்டினில்
இன்இள வேனில் தென்றல் வீசிடும்,
குன்றின் அருவி கூவும் குயிலுடன்
குழலின் இன்னிசைத் தீப்பொறி பேசுக.

.........

நன்செய் புன்செய் நானிலப் பயிர்கள்
நல்ல மாமழை நட்புக் கேங்கிடும்
அன்புற் றுர்த்திடும் அனைத்துயிர் கட்கும்
அரிய மழை முத் தணைத்துத் துய்த்திடு.

.........

வெற்றி வேந்தர் வீரவாள் இன்றியும்
வெஞ் சினங்கொள் மறவர் இன்றியும்,
பற்றும் வாளின் துணையிலாது அன்பினுல்
பற்பல நாட்டைப் பற்றுதல் ஆண்மையாம்.

தன்உ ளத்தினைத் தன்கை ஏந்தியே
தருக்குடன் புற உலகில் காட்டலும்
தன்பழம் உடலில் புத்துணர்வினைத்
தந்து மாந்தனைத் தருக்கச் செய்திடேல்.

.........

அமைதி அற்ற என்றன் நெஞ்சினுள்
அலைகடல் போராட்டம் நீக்குக;
அமைந்த சிக்கலில் மேலும் சிக்கல்
அமைக்க வேண்டுவேன் அறிவு கொளுத்தவே.

நின்னை விழித்தெழச் செய்யவே அட
நீள இரைந்துநான் அழுது கூவினேன்,
அன்பு, கூச்சலோ ஓசையோ இல்லாது
அமைதி யாகத் தன்கடன் ஆற்றுமே.

.........

கோயில் கோட்டையில் நீண்டகாலமாய்
வாழ்க்கை, துன்பின் அழுகை ஆயிற்றுத்
தோயும் அன்பின் அவை இருந்த நல்
அறிஞன் தோன்றிடும் வரையில் துன்பமே!

.........

மண்ண கம்பல மலைகள் தாங்கினும்
மடியினில் பல இடிகள் வீழினும்
எண்ணிலாச்சுமை நமது நெஞ்சில்வாழ்
இழிவின் எண்ணப் புழுதியை ஆக்கின.

.........

என்றன் உள்ளத்து எழுச்சிக் குன்றினில்
எரிமலைத்தீ ஒன்றை எழுப்பிடு!
நின்று எதிர்க்கும் நக்கீரனைப் போல்
நெருப்புக் குருதி நரம்பை உடையவன்.

புதிய நாகரிகத்தின் பொய்மையைப்
பூண்டிலாமலே பொசுக்கி நீக்கிடு;
மதியினில் நினை வெளிச்சம் ஆக்கியே
மனத்த கத்துநீ இறந்து சாய்ந்திடு.

அடிமை எண்ணக் கலைகள் அனைத்தினும்
சாவின் அடிச்சுவடு ஆர்ந்து கூத்திடும்
அடிமைத் தனத்தின் மாய மருட்கைகள்
ஆயிரம்மொழி நாவிற்கு எட்டுமோ?
.........

அடிமை தன்உள் ளுணர்வை அறிவினை
ஐயகோ மிக மலிவாய் ஈகிருன்;
உடலை உயிரோடும் இருத்த எண்ணியே
உள்ளம் தன்னை விற்று விடுகிருன்.

# மேற்கும் கிழக்கும்

மேற்கில்
அறிவுத் திறனே
வாழ்க்கையின் ஊற்ருய் யிற்ருது உள்ளது.

கிழக்கே, அன்புடைமையே,
வாழ்க்கையின் அடிப்படை வளமாய் உள்ளது.

அன்பின் வழியிலே அறிவு
உண்மையை உணரும் வண்மை பெற்றிடும்.

ஆகவே,
விழிப்பீர், புத்துலகு காண விழைவீர் !

அன்பொடும் அறிவு கலந்திட
ஊக்கம் உந்த ஆக்கம் தேடுவீர் !

# கமுக்கம்

மேலை நாட்டின் மேன்மை வன்மை
மேம்பட் டொலிக்கும் பண்ணிலிலை;
காலை உயர்த்தி வயிற்றைக் காட்டும்
காமப் பெண்டிர் கண்ணிலிலை.

சோலை மலர்போல் தோன்றும் முகங்கள்
சுருளும் கூந்தல் தந்ததிலை;
வேலை கெடுக்கும் மதத்தை விட்ட
வெற்றி மிதப்பில் வந்ததிலை;

நூலை அறிவை இலத்தீன் எழுத்தால்
நோக்கித் தேக்கிக் கொண்டதிலை;
மேலை நாட்டின் வன்மை மேன்மை
மேவும் அறிவியல் ஆக்கியது.

மூலை முடுக்கில் ஒளிரும் விளக்கும்
முந்தும் அறிவியல் தேக்கியது.
மாலை நிழல்போல் நீளும் அறிவு
மணிநூல் ஆடையாலில்லை;
ஆலைத் துணியால் அணியும் பாகை
அறிவைத் தடுக்கும் தடையன்றோ?

# அன்பு

அன்பின் அகத்துணர்வே வாழ்க்கையை
ஆக்கும் ஒளிச் சுடராம்.
அன்பின் உறுதியிலே – வாழ்க்கையின்
ஆற்றல் பெருகிடுதே.

உன்கைப் பிடிமண்ணை – அன்பினால்
ஒளிர்சுடர் பொன்னாக்குவாய்!
அன்பின் நிறைவாழ்வினால் முன்றிலை
ஆசையால் முத்தமிடு!

அன்பின் மதுவாலே – பண்புகள்
ஆறாய்ப் பெருகிடுமே.
அன்பின் அடைமொழியில் – இறைமை
ஆட்பட்டு உயர்ந்திடுமே.

அன்பின் அணைப்பினிலே – காதலின்
ஆர்வக் கொடி படரும்.
அன்பின் வலையொன்றினால் – மண் விண்ணின்
யாவுமே நாயகுவோம்.

# நிறைவு

நெஞ்சின் நிறைவே வேடனுக்கொரு
வேட்கைக் கலையைக் கற்பிக்கும்.
நெஞ்சின் நிறைவே உலகை வெல்லும்
நேய முறையைக் கற்பிக்கும்.
நெஞ்சின் நிறைவே சமூகத்திற்கு
நெகிழ்வை, வறுமை தருகிறது.

நெஞ்சின் நிறைவே மண்ணில் அமிழ்தின்
நீர்மைப் பண்பைத் தருகிறது.
நெஞ்சின் நிறைவே காலம், தொலைவை
நேர்நின் றெதிர்த்து வென்றிடுமே.
நெஞ்சின் நிறைவே அடிமை இடத்தில்
நிமிர்ந்த தலைமை தந்திடுமே.

# அன்பும் உண்மையும்

அன்பே எல்லா
ஐயங்களையும் எரிக்கட்டும்
அன்பே உன்னை
அரிமாவைப்போல் ஆக்கட்டும்

உண்மைக் கன்றி
மற்ருென்றுக்கு வணங்காதே
திண்ணிய நெஞ்சைக்
கொண்டார்குண்மை தென்புண்டு.

அரிமாப் போன்ருேர்
அன்பால் உண்மை கொள்வதினுல்
நரிமாத் தன்மை
தப்பியும் வாழ்வில் நயவாதே.

# வீறு

விதியின் மேலே உலா வருகின்ற
வீர ! வெளிப்படுவாய்;
மதியைத் துலக்க; இருண்ட உலகின்
விளக்கே வெளிப்படுவாய்!

இனப் போராட்ட இரைச்சல் அடக்கி
ஏற்றத் தாழ்வற்ற
இனப்போர் இலாத மாந்தன்மைக்கே
இசைப்பாய்! மேன்மை இசை!

உடன்பிறப் பாண்மை என்னும் வீணை
உறவை இசைக்கட்டும்!
உடலில் உயிராய் அன்பின் மதுவை
உணர்வில் ஊட்டிடுவாய் !

உலகில் மீண்டும் அமைதிக்கான
நாள்கள் உயரட்டும்
கலகப் போரில் களிப்பார்க் கெல்லாம்
அமைதிக் களிப்பூட்டு.

மாந்தர் இனமே நெல்வயலானால்
மண்டும் அறுவடைநீ!
மாந்தர் வாழ்க்கை வழிபோக்கிற்கு
வகுக்கும் குறிக்கோள்நீ!

அன்பு வரண்டுவிட்ட நிலையில்
அறிவு நாகம் அவனைக் கொத்தும்,
அன்பின் ஆட்சியின்கீழ் அறிவை
அடக்கத் தவறி விட்டான் வீழ்ந்தான்

விண்மீன் இயங்கும் வழிகள் கண்டான்
விரியும் எண்ண விளிம்பைத் தொட்டான்
மண்ணில் தான்தன் மனத்துள் ஐயோ
மணக்கும் அன்பின் வழியை மறந்தான்.

வாழ்வு பெருக்கும் ஊதியத்தை
வளமை சுருக்கும் இழப்பை அறியாத்
தாழ்வு நிலையில் அறிவின் வலையில்
தன்னை இழந்து சிக்கிக்கொண்டான்.

சூழ்ஞா யிற்றின் கதிரைப் பிடித்துச்
சூழ்ச்சிச் சிறையில் அடைக்கும் மாந்தன்
வாழ்க்கை இரவின் இருளைப் போக்க
வகையற் றன்பின் ஒளியற்றானே.

# வேட்கை

ஆற்றின் வரம்பை விட்டே
அடித்து முடித்தே ஓடிக்
காற்றின் அலையால் துடிக்கும்
கரைகொள் கடலை வேட்பேன்.

கடலின் பரப்பை விட்டுக்
கணமும் பிரிதல் ஆற்றேன்
உடலைப் பிரிந்து வாழும்
உயிரை இழக்க ஒப்பேன்.

# அன்பும் அறிவும்

அரியநல் அன்போ எரிமலை வாயிலில்
சிரித்துக் கொண்டே அஞ்சாது குதித்தது.
அறிவோ நுனிக்கொம் பேறித்
தயக்கத் தோடதை வியந்து பார்த்தது.

முழுமுதல் ஒருவன்பால் மூளும் அன்புடையோர்
பலவற்றினின்றும் விடுதலை பெறுகிறார்.
உண்மையும் அன்பும் ஒன்றுக் கொன்றுறவே.
இயலா தென்பதை இயற்றுவ தன்பு.
வெறியினை யுடையது அறிவு.
அன்பு மாண்புடையது, அச்சம் இலாதது.
விரித்தவிண் வலையில் அறிவு சிக்குறும்,
செயல்முறையில் அது பயன்கொளல் உண்மை.

அன்பின் படையோ ஆழ்உணர் வாகும்.
இன்பின் உணர்வைத் தென்பொடு தேடின்
அறிவு தந்திரமாய் அதற்குவலை விரிக்கும்.
அறிவின் சாரம் ஐயமொடு அச்சமே;
அன்பின் சாரம் உறுதி நம்பிக்கை.

அறிவோ அழித்திட வளர்ந்துவக்கின்றது;
அன்போ வளர்ந்திட அழிந்துவக்கின்றது.
அறிவு மலிவானது,
திரியும் காற்றுப்போல் எங்கும் கிடைப்பது.

ஆனால் அன்போ,
அருமையானது, பெருமதிப்புற்றது.
அறிவு, 'ஏன்? எப்படி?' என்றே, அலமரும்;

அன்போ அவ்விதம் அமைதல் இல்லை,
‘நீ முன்னேறெ’ன அறிவு முடுக்கிடும்;
நீயே முயற்சிசெய் என்கிறது அன்பு.
‘உண்டுகளி’ என்றே துளைத்திடும் அறிவு;
‘விடுதலை பெற்றிட அடிமை ஆகுக’
என்கிற தன்பு.
உரிமையே அன்பின் இன்பம்,
உரிமையே அன்புக்கு ஒட்டகப் பாகனே.

# சிந்தையும் உள்ளமும்

சிந்தை செப்பிற்று :
வழிதவறியோர்க்கு விழிநான்,
கலங்கரை விளக்கு.
மண்ணில் உழலினும் விண்ணில் விரைவேன்;
பார்என் பெருமையை!
முடவன் எனினும் அடலேறு அனையவன்
மக்கள் மயங்கிச் சிக்கலில் சூழ்கையில்
ஒல்லும் வகையால் நல்வழி காட்டுவேன்.
உள்ளம் உரைத்ததுவே
உண்மையை உரைத்தாய் அன்ப!
உலகில் உள்ளாய் நீ என்றுணர்வாய்,
கலக்கமற்றதனைக் கண்களால் காண்கிறேன்.
உலகினை அளப்பது உனக்குத் தெரியும்.
அகம் அளந்துணர்வது என்றன் கையிலே
இறையறிவினை நான் முறையொடும் அருள்வேன்.
இறைவன் உறைவிடம் எங்கென நாடுவாய்;
நானே அவனின் தேனூர் இருப்பிடம்.
கல்வியினில் நீ கசப்பினைக் காண்பாய்;
நானே அதிலே மீனாய்த் திளைப்பேன்.
உண்மையின் அசைவில்
விளக்கொளியாக விளங்கிடுவாய் நீ,
கவினுரு உலகின் தவத்தொளி நானே.
கால எல்லையும் ஞால வரம்பும்
உனக்குள அறிவேன்.
மனஉற வுள்ளதால் எனக்கவை இல்லை;
நான் ஓர் உலகப் பறவை,
நான்எனும் சிந்தையே, யார் உயர்ந்தவர்சொல்?

# அலைவதில் இன்பம்

கங்குலில் ஒருநாள் கவினுறும் ஆற்றங்
கரையிலே காட்சிகண் டிருந்தேன்.
சங்கொலிப் பதுபோல் ஆழ்மனத் துள்ளே
சலிப்பெனும் கடல்நெளிந் துலுக்கும்.

கங்குல்அஃ தமைதி கலந்திடும் நேரம்
கலிப்பிலா தாறுமே கடக்கும்,
அங்குநல் அமைதி இலாதபல் அலைகள்
தூளியில் குழந்தைபோல் ஆற்றின்
பங்குள ஆற்றுப் படுகையில் உறங்கிப்
பாட்டிசைப் பொருளென விளங்கும்.
கங்குலில் கண்ணில் தென்படா ஆற்றல்
கலகலப் பறவைகள் தம்மை
எங்குமே சிறைப்பட் டிருந்திடும் கூட்டில்
யாவுமே அமைதியில் கிடக்கும்.
மங்கிய விண்மீன் வெண்ணிலா அணிந்த
மாலையாய்க் கோப்பினில் விளங்கும்.
இங்கெனில் நெஞ்சின் துடிப்பொலி எனக்கே
இடியென ஒலித்திடும் பெரிதாய்,

திடீரென இந்த உலகினை அளக்கும்
தெளிந்த முன்காணியைக் கண்டேன்.
படீரென முதுமை இடையிலும் இளமைப்
பாங்கினைக் காலையாய்க் கண்டேன்.

அடேஎனக் குரலை கொடுத்தஅப் பெரியார்
"அகக்கண்ணைத் திறந்திடு பார்பார்
விடேல் ஆதோ வைய விதியினை மறைத்த
வெறும்திரை அகன்றது காணாய்.
அடேஅடே வாழ்க்கை அலைவதில் இன்பம்
அறிந்தெழு" என்றனர் அவரே.

# வாழ்க்கை எது?

வாழ்வின் பொருளை என்றால் அறிய விரும்புகிறாய்
வாழ்க்கை வரவு செலவுக் கணக்கிற் கப்பாலாம்.
உயிரைக் கொண்டு வாழ்தல் கூட வாழ்வெனினும்
உயிரை விடுதல் கூட வாழ்வின் பொருளாகும்.

இன்று நேற்று நாளை என்னும் அளவைக்கோல்
நன்றாகாதே வாழ்வை அதனால் அளக்காதே.

முக்காலத்தின் எல்லைக் கப்பால் முடிவற்றே
எக்காலத்தும் தொடரும் சுழலும் இயக்கமது.

மூவா இளமை அழியா வளமை உயிர்ப்பாற்றல்
நீயே படைத்துக் கொள்வதிலேதான் நிறைந்துளது.

மாந்தன் வாழ்க்கைக் கமுக்கம் அனைத்தும் வாழ்க்கையினைச்
சார்ந்துள்ளமையால் தானே உண்டு, சளைக்காதே.

வாழ்க்கைப் புதிரை வெளிப்படையாக விரும்புவையேல்
மார்க்சின் நெஞ்சில் மண்டி எழுந்த கனலைப்பார்.

உலகில் உழைக்கும் மக்கட்காக ஓயாமல்
மலைபோல் எதிர்த்த முதலாளியத்தை மாய்த்தல்பார்.

பொதுவுடைமை வாழ்வமைத்தல் ஒன்றே கோட்பாடு
அதுவே அவனின் வாழ்வுப் பொருளாய் அமைந்ததுவே.

நோக்கைக் குறுக்கிக் கட்டுப்பாட்டில் நுழையாதே
வாழ்க்கை ஆற்றின் ஊற்று வற்றி வரண்டுவிடும்.

போக்கைக் கட்டுப்பாடில்லாமல் போகவிடின்
வாழ்க்கை எல்லை இல்லா வளம்சேர் கடலாகும்.

வாழ்க்கை, பானை மண்ணுக்குள்ளே இருந்திடினும்
ஆக்கும் முடிவால் ஆற்றலாலே விரிவடையும்.

வாழ்க்கைக் கடலில் நீஓர் அலையே வேறன்று,
வாழ்க்கை ஆய்வின் மதிப்பும் மாண்பும் கொண்டதுவே

மண்ணுய் இருக்கும் வரையில் பண்பாடற்றவனே
உண்மை அன்பை உளத்தில் கொண்டால் உயர்வாய்நீ.

உண்மைக்காக உயிரைத் தரும்ஓர் உணர்வுண்டா?
மண்ணு டலுக்குள் வாழ்வைப் படைத்து மாண்புறுவாய்•

உயிரில் லாவிடில் கொடுப்பதற்கு என்னுண்டு?
உயிரால் தானே இறப்பைக் கொள்வாய் உயர்வடைவாய்?

உருள்வான் மண்ணை வாடகை வீடாய் உதறிஎழு
பொருள்இல் வாழ்வைத் தள்ளி அன்பின் புத்துலகை.

ஆக்கிடுவாய் நீ தேக்கிடுவாய்நீ ஒழுங்கிவையே
வாழ்க்கை உண்மை வழியில் ஓங்கும் எளிதாக.

உன்னுள் மறைந்த வாழ்க்கை ஆற்றல் ஓங்கட்டும்
உன்னுள்ளத்தில் உணர்ச்சிப் பொறிஒளிவீசட்டும்.

இருளை அகற்றி எழுசெங்கதிராய்த் தோன்றிடுநீ
அருமைத் தோழா மாணிக்கங்கள் ஒளிரட்டும்.

# அரசாங்கம்

அரசாங்கம் என்னவென வினவுகின்றாய்
ஆட்சியாளர்வழியை விளக்குகின்றேன்;
அரசாங்கம் சுரைக்குடுவை; ஆளுவோரால்
அதிகாரச் சட்டத்தால் உருளும் ஓடும்.

ஆட்சியின்கீழ் இருப்போரும் துயில்கின்றாரும்
அல்லலுற்று விழித்தெழுந்தால் ஆளவந்தார்
சூழ்ச்சியினால் அறியாமை தணைப்புகட்டும்
சுரைக்குடுவை தலைநிமிர்ந்து சுழலும் பாடும்.

மிதியுண்டோர், சுரண்டப்பட்டு அடியுண்டோர்கள்
மெத்தனமாய் என்றுமே உறங்கல் இல்லை.
கொதித்தெழும் ஓர் எரிமலையாய் வெடிப்புற்றார்ப்பார்
கோளரிமுன் நரியாவார் ஆளவந்தார்.

உண்மைசேர் ஆட்சியும் நாடும் எல்லாம்
உயர்ந்த பெருங்கடவுட்கே உரியதாகும்,
உண்மையிலே ஆள்பவனும் அவனே ஆவான்
உளயாவும் அறியாமை. அடிமையாகும்.

உமக்களித்த உரிமையினை மாந்தரே நீர்
உயிர்வாழ விற்று அடிமை ஆகிடாதீர்.
சுமக்கின்ற சிலைகளினால் மேலும் மேலும்
குருமாரைத் தோற்றுவித்துத் துன்புறாதீர்.

மேல்நாட்டின் குடியரசு புதியதன்று,
வியப்பிற்கும் அடிமைக்கும் தாலாட்டல்போல்
கால்ஊன்றி நின்றபழங் கள்ளே யாகும்,
கடுங்கோன்மைக் குரியபுதுப் பெயரே ஆகும்.

விடுதலைக்கும் உரிமைக்கும் தலைவி என்று
வேட்கின்ருய், வாழ்த்துகின்ருய், மக்கள் பேரில்
கெடுதலைக்குத் திரைமறைவில் உள்ள பேயே
கேடுசெயும் தனியாண்மை அதிகாரம்தான்.

சட்டசபைச் சீர்திருத்தம் வாக்கெடுப்புச்
சலுகைகளும் உரிமைகளும் மேலை நாட்டின்
மட்டற்ற மயக்கத்தால் உறக்கம் ஊக்க
மகிழ்ந்தேற்ற மருந்துகளே ஆகும் யாவும்.

சட்டமன்றில் நெருப்பெழவே பேசுவார்கள்
சட்டமன்ற இருக்கைவிட்டு எழும்போதேதும்
கொட்டாவி விட்டதென மறந்து போவார்
குடிகளினைக் கடவுள்தாம் காக்க வேண்டும்.

அரசாட்சி செல்வர்களை மேலும் மேலும்
பணம்பெருக்கும் ஆலைகளாய் மாற்றும் ஏற்றும்
முரசொலிப்ப தெல்லாமே வெறும் முழக்கம்
முகத்தோற்றம் வேறு, அகத் தோற்றம் வேறு.

செம்மலர்க்கா, மணத்தோட்டம் என நினைத்தாய்,
சிறைச்சாலை என்பதனை அறித்திலாய்நீ
நம் மரத்தின் கூடென்று மகிழ்ந்தாய், ஆட்சி
நமைத்தூக்கும் தூக்குமரம் உணர்வாய் நீயே.

# கலை

வாழ்வை நிலைக்கச் செய்யும் வன்மை,
வளமை கலைக்குண்டு,
சூழ்ந்துள வைய உண்மை அனைத்தும்
துலங்குதல் கலையாலே.

முன்காணிகளே, முன்காணிகளே
முழுமைக் கலையுணர்வீர்
அன்பால் உண்மை காணுவதே நல்
கலையின் அருள் என்பீர்.

கலையின் இலக்கு வாழ்வாம் நெருப்பைக்
கனன்றெழச் செய்வதுவே
நிலையில்லாத நீர்க்குமிழாக
நிமிர்தல் கலையன்றே.

இளவேனில்தரும் கோடைமாரி
இன்பம் போலின்றேல்,
உளத்தே பொங்கும் கலையின் ஓட்டம்
உண்மை உணர்த்திடுமா?

உப்பும் உணவும் ஆறும் நீரும்
ஒப்பது கலை; இன்றேல்
சிப்பியும் முத்தும் பயனற்றவைபோல்
செழிக்கா துயர் கலையே.

சமுகப் புத்துயிர் உண்மைக் கலையின்
சார்பில் பிறப்பதுவே,
சமுகம் உண்மை சார்ந்திடவிலையேல்
கலையும் செத்ததுதான்.

# நீயும் நானும்

இரவினை நீ படைத்தாய் - உலகில்
எழில்ஒளி விளக்குகள்
நான்படைத்தேன்
பரந்த மண் நீ படைத்தாய் - பயன்
படுகின்ற பாண்டங்கள்
நான் படைத்தேன்.

கல், மணல், நிலம்படைத்தாய் - அதில்
காவனம், அருப் பயிர்
நான்படைத்தேன்.
கல்லினைத் தணலில் இட்டே - ஒளிக்
கண்ணாடி வண்ணங்கள்
நான்படைத்தேன்.

நஞ்சினை நீ படைத்தாய் - அதை
நலம்தரும் அமிழ்தென
நான் படைத்தேன்
கொஞ்சமோ நின் கொடைகள் - அவை
வாழ்வொடு கூட்டிநான்
குணங்கள் கொண்டேன்.

# இலெனின் கனவில் இறைவன்

இலெனின் :

உயிர்களின் இடையிலுன் ஆற்றலை உணர்ந்தோம்.
எங்கும் இருப்பவன், என்றும் உளன்நீ,
எனினும் அதைநான் எங்ஙனம் அறிவேன்?
இன்றினைக் கண்களால் நன்கு காண்கின்றேன்.
யாருக்கிறைவன் நீ?

அறிவும் கல்வியும் ஆற்றலும் திறமையும்
மாலைப்போதில் மதுவின் மயக்கால்
கோலச் செந்நிறம் கால்கொளும் விழிகளில்
உயிரை உறிஞ்சியே பொதுமை பேசிடும்
வல்லமையாளன் நீ நல்லறத் தலைவன்நீ
எனினும் உன் உலகில்
தொழிலாளியின் துயர்க்கெல்லை இல்லையே.

முதலாளியக் கப்பல் அழிவதென்றோ?
உன்றன் உலகம்
விடுதலை நாளை வேண்டித் தவித்திடும்
மீட்சி நாட்குக் காத்திருக்கின்றது.

உரிமைக்காக உள்ளங் குமுறுவர்
கணக்கும் பிணக்கும் தீர்க்கும்நாள் என்றோ?

அரமகளிர் :

நல்லறிவின்னும் கட்டுண்டுள்ளது.
அன்பும் உரிமையும்
மாந்தர் அனைவர்க்கும் மல்கிடவில்லை.
உலகப் படைப்பின் கலைஞ,

உன் ஓவியத்தில் இன்னும்
நிறைவிலாக் குறையொன்று ஏதோ உள்ளதே.
காட்சிக் கினிய மாட்சி ஓவியம்
கேட்பார் அற்றுக் கிடத்தல் ஏனோ?

உழைக்காதுண்டு களித்திருப்போனும்
எத்திப் பிழைக்கும் ஒட்டுண்ணியாளனும்
மதத்தின் தலைவனும் சமயச் சழக்கனும்
மாந்தர் வழியெலாம் வலைவிரித்துள்ளனர்;
ஏற்றத் தாழ்வின் ஏற்பாடின்னும்
முறைமாறாமல் கறையாய் உள்ளதே
இந்நிலை மாறுவதெந்நாள்?

இறைவன் :

எழுவீர், எழுவீர் !

உரிமை இழந்தே உணர்ச்சியற்று உறங்கும்
ஏழை எளியரைத் தட்டி எழுப்பிட
எழுவீர் நீங்கள் எழுவீர்!
கொடும்பணக்காரர் கோட்டைகள்
அடியோடு இடித்துச் சாய்த்திட எழுவீர்!

மக்களின் நெஞ்சில் மங்கா உணர்ச்சி
எக்களித்துயிரில் மிக்கெழச் செய்க!
நெருப்பின் கொதிப்புக் குருதியில் விரிக!

எளிய ஊர்க்குருவி
பெரிய வல்லூறினை எதிர்த்துப் போரிடும்
ஊற்றமும் ஆற்றலும் மேற்படச் செய்க.
மக்களாட்சியின் மாட்சி மிக்க நாள்

கைக்குள் வந்திடக் கடுகி வருகின்றது.
பழமைத் தடைகளை அழித்தொழியுங்கள்
உழவர்க் குதவாக் கழனி எங்கிருப்பினும்
உழைப்பவர்க் கெட்டாத் தழைமணிக் கதிர்கள்,
வழி தெரிவதுபோல் வயல் எரியட்டும்.
பற்றும் நெருப்பால் முற்றுகை இடட்டும்!
கோயிலில் எரியும் கோல விளக்குகள்
மாளிகை மாடத்து மணிவிளக் குகளை
அணைத்து விடுவதை ஆதரிக்கின்றேன்;
எல்லார்க்கும் எல்லாம் என்றிருக்கட்டும்.
இல்லை என்றசொல் இல்லா தொழிக;
பளிங்குக் கற்களால் பாங்குறத் திகழும்
தொழுகை, இடங்களை வெறுக்கின்றேன் நான்.

என்னை வணங்க மண்ணினுல் ஆன
குடிசைகள் எழட்டும்.
உழைப்பவர்க் குலகம் உரிமை ஆகட்டும்.

இதுநாள் தோன்றும் புதுநாகரிகம்
கண்ணுடித் தொழிற்சாலையே,
கீழை நாட்டுப் பாவலனுக்கு
வெறியை ஊட்டுக, நொறுக்கி எறிவானே.

# திருகுர்ஆன்

உலக அமைதியில் ஆசையா – அதற்கு
உற்ற அடிப்படை யாதெனா
மலர்ந்து துளிர்த்தது நெஞ்சிலே– அந்த
மாபெரும் எண்ணம் உணர்ந்தையோ?

சால்பு பழம்வரலாற்றினை – அட
சாய்த்தனை மாய்த்தனை தீயிலே
நூல்களின் தாய் குர்ஆன் ஊற்றினால் – உன்
நுண்ணறிவுக் கேணி நிரப்புக.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமே – எனப்
பேதம் அறுத்தவர் யாரடா?
சிறப்புடையோம் எனப்பேசிய – மதச்
சிறியரைத் தீய்த்தவர் யாரடா?

மேலைய பண்பாட்டுக்கப்பாலே – உன்
மின்னல் விழியைச் செலுத்துவாய்
மேலைய நாட்டினர் சூழ்ச்சியை – அட
மெத்த உணருவாய், வெல்லுவாய்.

சின்ன நரித்தனம் கைவிட்டு - ஒரு
சீறும் புலியினை போல் எழு!
சின்ன நரி திருட் டோர்உரு – புலி
செம்மை விடுதலைப் பேருரு!

சாவினைக் கண்டஞ்சும் பாழ்நரி–பிறர்
சாவினால் வாழ்ந்திட எண்ணுமே,
சாவினை ஏற்கும் வரிப்புலி – மனச்
சஞ்சலம் ஏதும் இலாதது.

திருகுர்ஆன் இன்றேல் புலியுளம் – ஒரு
சிறுநரி யாகத் திகழ்ந்திடும்,
திருகுர்ஆன் செப்பும் அரசியல் – எந்தத்
தேயத்தையும் உயர்வாக்கிடும்.

உள்ளுயிர் அன்பை அறிவினை – நமில்
ஒன்றுபடச் செய்யும் திருகுர்ஆன்!
கொள்ளுக அன்பின் அறிவினை – வையக்
கோளின் மகிழ்ச்சியைக் கூட்டுக!

திருகுர்ஆன் என்பதும் என்னவாம்? – முத
லாளி இனத்திற்குச் சாப்பறை!
திருவுற் றெழுந்தொழிலாளர்க்குப் – புத்
தெழுச்சி, உலகிற் குறுதுணை.

# எரிமலைச் சிதறல்கள்

மாண்பார் உலகை வெல்லுவதும்
வாழ்க்கைப் போரில் வெல்லுவதும்
ஆண்மை என்னும் கூர்வாளே
அதனை என்றும் ஏந்திடடா!

∴ ∴ ∴

ஒவ்வொரு கணமும் வையம்
உழன்றுகொண் டிருத்தல் எல்லாம்
செவ்விய புது வையத்தைச்
செழிப்புறச் செய்வதற்கே.

∴ ∴ ∴

செயலால்தான் வாழ்க்கைச்
சிறப்புகள் சேரும்.
அயலாளால் இல்லை
அளறும் துறக்கமும்
மண்எனும் இவ்வுடல்
மாண்புருக் கொண்டதும்
எண்ணிடும் எண்ணத்தினல்!

∴ ∴ ∴

புறட்படு மலர்கள் தூவிடுவோம்
புதுமதுக் குடத்தை நிரப்பிடுவோம்,
பறந்திடு வான முகடளப்போம்
புத்துல கொன்றைப் படைத்திடுவோம்.

∴ ∴ ∴

உண்மைக்குக் கட்டுப்பட்டு
ஓங்கி இருப்பாயேல்
திண்ணிய வேங்கை அவன்,

ஃ ஃ ஃ

வெம்பி வீணாய் வையத்தில்
விதியில் மதியை இழப்பதும் ஏன்?
நம்பிக்கை கொள் திடமாக
நட்புற்றதுபார் புத்துயிரே.

ஃ ஃ ஃ

அறிவு, உள்ளம், பார்வை அனைத்தும்
விரிந்து பரந்து வாழ்வில்
நெறிபட நிற்பது நிகரிலா வாழ்வே!

ஃ ஃ ஃ

நிலைத்தஓர் அமைதியைக் காட்டிலும்ஓர்
நேர்படு போராட்டம் சிறப்பே.
நிலைத்தஓர் வாழ்க்கையின் கமுக்கம்
நிறைவுறு ஓர்பே ராசைதான்.

ஃ ஃ ஃ

இருக்கின் றேனா இல்லையா என்று
மறுகி நின்றது அறிவே —
இருக்கின்றாய் எனஅன்பு இயம்பிதே.

ஃ ஃ ஃ

மாட்சி மிக்க விண்ணிலே
அடிமை வாழ்வைக் காட்டிலும்
ஆட்சி நரகில் செய்தலே
ஆண்மை; அழகும் ஆகுமாம்.
தாழ்ச்சி இல்லை நரகில்நீ
தலை நிமிர்ந் திருத்தலே.

ஃ ஃ ஃ

அலகைக் கெதிராய் அஞ்சாது நிற்பாய்;
இலகுவாள் நீ, அவ் வலகை
ஒளிர்வாள் தீட்ட உதவும் சாணையே.

ஃ ஃ ஃ

பெண்மைக்கு அளிக்கும்
பெருமையே மண்ணில்
சமூக வளர்ச்சிக்குச்
சால்பு.

ஃ ஃ ஃ

ஆணே பெண்ணைப் பாதுகாப்பவன்
ஆன்இவ் உண்மையை அறியா
இனம் உலகத்தில் இல்லா தோழியுமே.

ஃ ஃ ஃ

அன்பு விடாமுயற்சி
இவ்விரண்டும் வாழ்க்கைப் போர்க்கு
என்றும் உதவும்
படை.

ஃ ஃ ஃ

வாளுக் கிரையாய் யார் வீழ்ந்தாலும்
வருந்தித் துடித்து வதைபடுவேன்,
தேளின் கடுப்பை போலே வையத்
தீமை திணறச் செய்திடுமே.

ஃ ஃ ஃ

திருமறைக் குர்ஆனின் அருமையை அறிக;
முதலாளியத்தின் முடிவுரை, பிணைப்பறை;
பாட்டாளியத்தின் படைத்துணை அதுவே.
காதலோ நெஞ்சில்

ஃ ஃ ஃ

கனற்பொறியாய்த் தோன்றிப்பின்
நாவிலே நல்ல
பெருங்கதை யாய்மாறிப்
பாவிலே பாவலன்
ஆசைப் பரியேறி
ஏவலே இன்றி
வரும்.

ஃ ஃ ஃ

இரவும் பகலும் தொடர்ந்து
நிகழ்வை என்றும் ஆக்கும்
இரவு பகல்என் றிரண்டின்
இணைப்பு வடந்தான் வாழ்க்கை;
உரங்கொள் ஆணி வேராம்
உலகில் பிறப்பும் இறப்பும்.

ஃ ஃ ஃ

கைவ ண்ணத்தைச் செயலாக் கத்தைக்
காட்டத்தானே உலகம்,
செவ்வண் ணத்தைப் பாடும் போராய்ச்
சினத்தல் வாழ்க்கை ஆமோ?

ஃ ஃ ஃ

உன்றன் பார்வைதனில் தூய்மை
ஊன்றல் வேண்டும் அது இன்றேல்
நன்றாய் வில்லின் விடும் அம்பும்
நாடும் இலக்கை அடையாதே.

செயலற்றிருப்பதே வாழ்க்கையின் கமுக்கம்;
இயம்பிய தொருகுரல் மலையிலிருந்தே.
எறும்பொன்று எதிர்குரலாகச்
சுறுசுறுப்பே பெரும் இன்பம்' என்றதுவே.

ஃ ஃ ஃ

நெஞ்சம் கவர்ந்திடும் நல்மணத்தை—விழி
நிறைந்து களிப்புறும் நல்நிறத்தை
அஞ்சொற் கடங்கா மறைபொருளை—நீ
ஆக்கி வெளித்தந்த தெப்படியோ?
விஞ்சும் மணத்தில் நிறத்தினிலே — நான்
வியப்பில் சிறைப்பட்டு அடங்கிபுளோன்.

ஃ ஃ ஃ

என்றும் மக்கள் உடன்பிறப்பென்னும்
யாழிசை மீட்டிடுவாய்,
அன்பாம் மதுவை மீண்டும் மீண்டும்
அருந்திக் களித்திடுவாய்!

ஃ ஃ ஃ

தன்னழகைக் கண்ணாடி
தன்னில் தனித் துவந்து
பொன்னழகி பார்ப்பதுபோல்
பூக்கும் மலர்கள் வான்

ஓங்கும் கிளையிருந்து
ஓடைப் பளிங்கினிலே
பாங்குறப் பார்க்கும்
மகிழ்ந்து.

ஃ ஃ ஃ

நிறைந்த வீரமும் நெஞ்சில் தீரமும்
நிமிர்ந்த வாழ்வுடை வீரர்க்கே,
அறையும் உண்மையும் அச்சம் இன்மையும்
அரண்களாக அமைந்திடும்.

சிறைபடாதநல் அன்பின் செய்கையும்
சீர்திருத்தமும் ஏற்படும்,
இறைவன் படைப்பினில் சிங்க ஏற்றிடம்
இழிநரிச் சூழ்ச்சி எடுபடுமா?

ஃ ஃ ஃ

இறைவனிடத்தில் அலகை இயம்பினான் :
நீயோ உடலுக் குயிர்அளிக் கின்றாய்;
நானோ உயிருக் குணர்ச்சி யளிக்கிறேன்.
நீயோ அமைதி நெறிவகுக்கின்றாய்;
நானோ போர்க்களம் நாடச் சொல்கிறேன்;
புழுதியில் புரளும் மாந்தன் நின் மடியில்
பிறக்கிறான், ஆயினும் என்னிடம்
சிறக்கிறான் அறிவினைப் பெறுவதினாலே.

ஃ ஃ ஃ

மண்டும் பேராசை
மனித இனத்தையே
துண்டு துண்டாக்கித்
துடைத்தெறியும், அண்டும்
உடன்பிறப் பாண்மைக்கு
உரியதாம் அன்பை
உடன்பிறப்பாய்க் கொண்டுவிடு!

∴ ∴ ∴

உண்மை அன்பனின் உயர்வினைக் கூறுவேன்
இறப்பினை எய்தும் காலையும்
சிறப்புற அவன்முகம் சிரித்திருக்கும்மே.

∴ ∴ ∴

தன்னை ஆளும் தகுதியைத்
தவற விட்ட ஒருவனைப்
பின்னை யாரும் வீழ்த்துவர்
பெருமை கொள்ள வீறிடு !

∴ ∴ ∴

உள்ளம் அன்பின் உறுதியின்
வெள்ள மாக வெளிப்படின்
அள்ளி அணைத்தே வையகம்
அணைத்தும் வெற்றி கொள்ளுமே.

∴ ∴ ∴

இறப்பிற் காட்படும் சமுகமும்,
எழுச்சி கூறிடும் புலவனைப்
புறக்கணித்திடும் சமுகமும்
பூண்டோ டற்றிடும் உலகிலே.

∴ ∴ ∴

சட்டம் இழக்கும் சமூகம்
சாய்தல் உறுதி உறுதி;
கட்டுக் கோப்பை இழந்தால்
கலைதல் இறுதி இறுதி.

ஃ ஃ ஃ

ஆணின் ஆடையாய் வாழ்பவள்
அருமைப் பெண்என எண்ணுவாய்,
பேணும் பேரழகு அஃதவள்
அன்பின் பேரொளி ஆகுமே.

ஃ ஃ ஃ

விட்டி லாக இல்லா மைக்கு
நன்றி ஆயிரம் இறைவற்கே.
எட்டி வேற்றார் நெருப்பை விரும்பி
இரக்கும் ஒருவன் நான் அல்லேன்.

ஃ ஃ ஃ

கண்ணுக் கெட்டா உயரத்தில்
காக்கை பறக்க அறியாது,
விண்ணின் கழுகின் பார்ப்பதனைக்
காக்கை நட்பால் கெடுத்ததுவே.

ஃ ஃ ஃ

கழுகதன் உயிர்ப்பாற்றல் நம்
காளையர் அகத்தில் சேர
வழியினை வான் அரங்கில்
விரித்தகோ காண்கின்றார்கள்.

ஃ ஃ ஃ

உள்ளம் இலாத உடலைக்கண்டே
வெறுப்புண் டாயிற்றிறைவற்கே
உள்ளம் உயிரும் உடைய இறைவன்
உயிருள்ளோரின் இறைவன் ஆவானே.

⁂ ⁂

இறையிலி என்பவன், இறையினை வைத்துமே
இவ்வுலகில் உயிர் வாழ்பவனே
நிறையுடை அன்பினுக் குயிர்கொடுத்தாள்பவன்
நெஞ்சினில் உண்மையை ஆள்பவனே.

⁂ ⁂ ⁂

என்றிவ் வுலகு பழமையை எய்துமோ
அன்றிவ் வுலகினை ஆன்ற புதுமைக்கு
நின்றழைக்கும் குர்ஆன் நிமிர்ந்து.

⁂ ⁂ ⁂

அகத்தில் ஒளிரும் நெருப்பே
அணைத்து மாந்தர்க் கிருப்பு;
அகத்தின் நெருப்பே வாழ்க்கை
அழலாய்த் தழலாய் ஒளிரும்.

⁂ ⁂ ⁂

அடிமைகள் என்றும் ஓய்வினை விரும்புவர்
விடுதலை உரிமையர் உலகில்
கெடுதலை மாற்றித் தொடர்ந்தியங்குவரே.

0 0 0

கல்விக் கழகத் தலைவர் எல்லாம்
கண்முன் உயிர்கொண் டுலவிடினும்
சொல்லின் அவர்தம் இயக்கம் பிணத்தின்
இயக்கம் என்பேன், ஏனெனிலோ
ஒல்லை அவர்கள் விடுச்சும் மூச்சு
மேலைநாட்டின் உறவன்றோ?

0 0 0

இனத்தின் நெஞ்சினிலே – உள்ளம்
என்றோ மடிந்ததினால்
மலை துரும்பாகிப் – புயலில்
மடிந்து சுழன்றதுவே.

0 0 0

வாழ்வின் முழுமையை வாழ்வின் மதிப்பைச்
சூழ்ந்தெய் துவதே அன்பின்
ஏழிசை வீணையை இசைப்ப தாகுமே.

0 0 0

மூதாதை யர்பால்உன் வைரம் ஒன்றை
முன்னுரிமை யாய்கொள்ள வெட்கம் கொள்வாய்
நீயாக அடையாத இரவல் வைரம்
நிறைவின்பம் தந்திடுமா நினைத்துப் பாராய்.

0 0 0

மாந்தன்மை மாந்தனை என்றும் மதிப்பதைச்
சாந்துளது அஃதொன்றே சால்பு.

0 0 0

கண்ணில் படாதிருக்கும் – நெருப்பைக்
காலின் புழுதியின் கீழ்
கண்டு பயன்படுத்து – பிறர்தரும்
காம்புத்தீ வெட்கம் தரும்.

0 0 0

ஏற்பதால் வறுமை இன்னும் மிகுந்திடும்.
ஏற்பதால் ஏற்பவன் ஏழையாய் மாறுவான்,
ஏற்பதால் உள்ளமும் உணர்வும் இழிவுறும்,
முயற்சியால் அறிவின் ஒளியை
இயற்கையாய்ப் பெருமல் ஏற்பதழிக்குமே.

0 0 0

அடிமைத் தனத்தால் உடலும்
அகமும் கொல்லப் படுமே.
அடிமைத் தனத்தால் உணர்வே
அழுந்திச் சுமையா கிடுமே.
அடிமைத் தனத்தால் சமூகம்
அனைத்தும் பிளவுற் றிடும்
அடிமை தனத்தால் மக்கள்
அழிந்தார் பகைமை கொண்டே.

0 0 0

குலத்தின் குடிப்பெருமை எல்லாம் – உடல்
கூட்டோ டழிந்து ஒழிந்துபோகும்
நலத்தின் நமையுணர்த்த வேண்டில் – உயர்
நாகரிகம் மாந்தன்மை யாகும்,

0 0 0

அன்பினுல் உள்ளம் உறுதி அடைகையில்
மன்பதையை ஆளும் மகிழ்ந்து.

0 0

உறங்கும் குழந்தையின் ஒண்கை யிருந்து
நழுவி விழுந்திடும் பொம்மைகளைப்போல்
வண்ண மலர்கள் மண்ணில் உதிர்கின்றன.

0 0 0

காதற் காட்சி இன்பம்
பிறர்க்குக் காட்டல் அரிதே;
ஊது உலைத்தீப் பொறிபோல்
ஒளிர்ந்து கணத்துள் மறையும்.

0 0 0

நெஞ்சம் உடலை விட்டால்
நெஞ்சம் நிலையா(து) அழிவை எய்தும்
நெஞ்சம் மண்ணும் உடலில்
நெகிழ்ந்தே சிறைப்பட் டாலும்
மண்ணும் விண்ணும் எல்லாம்
மாந்த னுடைய நெஞ்ச
எண்ண ஆளுகைக் கீழ்
இயங்கிக் கட்டுண் டாடும்.

∴ ∴ ∴

உள்ளத்தால் பொய்யா துலகுக் குடையவர்
தள்ளத் தகாவகையில் தாமே தலைவாழ்க்கை
வெள்ளத்தால் வந்தேறுவர்

0 0 0

தென்றல் காற்றினிலே – ஓரிதழ்
சிறிதே அசைந்திடினும்
என்றன் உளம் துடிக்கும் – விழியில்
எம்பும் அருவியம்மா.

வாழ்வதனைச் சிறப்புறுத்தல்
கலையே யாகும்,
வாழ்வுநிலை பெறச்செய்தல்
கலையின் வேலை,
வாழ்வினைமெய் நிலைநிறுத்திக்
கலைதான் இந்த
மண்ணிலதை உயர்த்திவிடல்
வேண்டுந்தானே.

தாயகமே தூய்மைக்கோர் இருப்பே நின்றன்
தன்மானம் காத்திடவே உயிர்துறந்தோம்.
நீயகத்தில் இருப்பதனால் நின் அகத்தில்
நிறைந்தோடும் குருதியெலாம் நாங்கள் அன்றோ?

உன்னகத்தே உணர்விறந்தால்
இறந்துபோவாய்,
உன்னகத்தே உணர்விருந்தால்
உயிர் வாழ்வாய்நீ.

மெழுகுத் திரியின் கதையை மேலும்
விளம்பாதேநீ நிறுத்து;
கொழுந்தீ நாடிப் போராட்டத்தில்
குதித்தின் புற்றே மடியும்
எழும்ஓர் விட்டில் பூச்சியைத்தான்
போற்றி இசைப்பேன் என்றும்.

நிலத்தில் நீரில் வானில் எங்கும்
அலைந்து திரியும் நெஞ்சம் கொள்
களத்தை விட்டு விலகி நின்று
போராட்டத்தைக் காணுதே.

போராட்டத்தில் இறங்கினுல்தான்
புலப்படும் உன் ஆண்மை.
போராட்டத்தில் மடிதல் சிறப்பு
வாழ்வதினும்அது புகழாகும்.

⁂ ⁂ ⁂

அரியணை யாவும் மண்ணே
ஆள்பவர் நிலையும் மண்ணே
விரிந்தவான் எழுந்த கோயில்
வேதநூல் மணிகள் மண்ணே,

புரிந்திலேன் என் திறத்தைப்
புடைபெயர்ந்துயரச் சென்றேன்,
தெரிந்தது நானும் மண்ணே
திரிபவை யாவும் மண்ணே

⁂ ⁂ ⁂

கரையில் இருக்க வேண்டா
வாழ்க்கைக் கடலின் அலையும்,
விரையும், ஒதுக்கும், அதனுல்
விரிநீர்க் கடலுள் மூழ்கு!

போரா டலைக்கள் ளோடு
போராட்டத்தின் மூலம்
சீரோட்டம்தான் சேரும்
செம்மை முழுமை அதுவே.

⁂ ⁂ ⁂

மாந்தனின் பெருமையும் மடிவிலாச் சிறப்பும்
வானினைக் காட்டிலும் மேன்மை கொண்டவை-
எனவே,
மக்கள் அனைவரும் தக்க மதிப்பினைச்
செலுத்தலே சிறப்பாம்; சிறப்பு
மக்கள் இனத்தின் மாண்புயிர் ஆகுமே.

ஏன் இனிமேல் முகத்திரைகள்?
எடுத்தெறிமின்
ஏந்திழையீர்,
ஆண்கள் தாம் இந்நாளில்
அரிவையராய்
மாறினரே !

அன்பே, நீதான் நெஞ்சின் வன்மை;
இன்பக் கனவு; தென்புறும் உளத்தின்
மண்டிய மறைபுதிர்; தொண்டின் உழைப்பு;
நீயே எங்களின் வெற்றி
நீயே அனைத்துமாம் வாவா அன்பே!

# இதோ ஒரு வானம்பாடி

சொக்கு சுப்பிரமணியன்

பாரதத்தின் தலைநகர் தில்லி! குடியரசுத் திருநாள் கோலம் பூண்டிருக்கிறது. வண்ணங்கள் தெறிக்கும் கொடிகளால் தலைநகரின் ராஜபாட்டை (ராஜிபத்) எழிலுற விளங்குகிறது, இலட்சக்கணக்கான மக்கள் பாட்டை நெடுகிலும் நின்று நாட்டைக் காக்கும் காவலர் அணிவகுப்பைக் காணக் காத்திருக்கிறார்கள். அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொள்ள ராஷ்டிரபதி மேடையில் வீற்றிருக்கிறார். குடியரசுத் திருநாளின் கோலாகலப் பவனி துவங்குகிறது. படையினர் அணிவகுத்து வருகிறார்கள்; அவர்களுக்கு முன்னே முப்படை இசைக் குழுவினர் உணர்ச்சி முறுக்கேற்றும் ஒரு பாடலை இசைத்த வண்ணம் அழகு நடை பயில்கிறார்கள் ஒலிக்கின்ற அந்தப் பாட்டோ...

"ஸாரே ஜஹா(ன்) ஸே அச்சா[ஹ்]
ஹிந்துஸ்தா(ன்) ஹமாரா
ஹம் புல்புலே(ன்( ஹை(ன்) உஸ்கி
ஏ குலிஸ்தான் ஹமாரா"

என்னும் மகத்தான வெற்றிப் பாட்டு ஆகும்.

"உலகம் அனைத்திலும் சிறந்தது
எங்கள் ஹிந்துஸ்தானம்!
எங்களுடையது இப்பூங்கா!
நாங்கள் அதன் புல்புல் பறவைகள்"

என்னும் இந்தப் பாடல் பாரதத்தின் மூலைமுடுக்கெல்லாம் அன்றும் இன்றும் என்றும் ஒலிக்கும் பாடலாகும். அடிமையெனும் விலங்கு அகற்றி அன்னைதனை அரியணையில் அமர்த்திய நேரத்தில், அரசியல் நிர்ணய சபையின் தொடக்கத்தில் பாடப்பட்ட பாடல் 'யாரே ஜஹா(ன்) ஸே அச்சா(ஹ்) இக்பால் என்னும் வானம்பாடியின் இதய கீதம் இப் பாடல்! பாரத விடுதலையின் உதய கீதம் இது!

யார் இந்த இக்பால்? உலக மகாகவியெனப் பிரபஞ்சமே போற்றிய மாமேதை! அவர் மாபெரும் கவிஞர்; பேராசிரியர்; பன்மொழிப் புலவர்; அரசியல்வாதி: தத்துவஞானி; எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னையே உணரும் தத்துவத்தை உலகில் பரப்பியவர்; மனிதாபிமானம் மிக்க உயர் மானுடர்! "என் முன்னோர் பிராம்மணர்கள்; அவர்கள் கடவுளைத் தேடினார்கள்; நானோ மனிதனைத் தேடுகிறேன்" என்று கூறியவர் இக்பால். முழுமையான மனிதனைக் காண்பதே அவர் வேட்கை.

பிளவு படாத இந்தியாவின் பஞ்சாப் பகுதியில் உள்ள ஸியால்கோட் நகரில், "நீங்கள் இப் பூங்காவின் காவலர்கள்; இதன் பிளவு போக வழி தேடுங்கள்" என்று பண் பாடிய இக்பால் பிறந்தார். தந்தையார் பெயர் ஷேக் நூர் முகம்மது. இமாம் பீபீ தயார். 1877 நவம்பர் 9–ஆம் நாள் பிறந்தார் இக்பால் என்பர். எனினும் அவர் பிறந்த நாள் குறித்து உறுதியான சான்றேதும் கிடைக்கவில்லை. இக்

பாலுக்கு இல்லத்தார் சூட்டிய பெயர் ஷேக் முஹம்மது இக்பால். இக்பால் என்பதன் பொருள் புகழ் அன்றே!

கவித்துவம் அவரோடு பிறந்த ஒன்று. இளம் வயதிலேயே உன்னதமான கவிதைகளைப் பாடினார் இக்பால். 17 வயதிலேயே புகழ்மிக்க கவிஞரானார். பஞ்சாபின் எல்லாப் பகுதிகளும் அறிந்த கவிஞராக இக்பால் திகழ்ந்தார். அவர் கலந்து கொள்ளாத பெரிய 'முஷைராக்கள்' ஏதுவும் இல்லை. ஷ்காட்டிஷ் மிஷன் பள்ளியில் உயர்நிலைக் கல்வி பெற்ற இக்பால் லாகூரில் உள்ள கல்லூரியில் எம். ஏ. பட்டம் பெற்றார்.

இஸ்லாமிய கலாசாரத்திலும் தத்துவத்திலும் தேர்ச்சிபெற்ற டி. டபிள்யூ. ஆர்னல்டு என்னும் பேராசிரியரின் தொடர்பு அவருக்கு அங்கு ஏற்பட்டது.

எம். ஏ. பட்டம் பெற்ற இக்பால் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். 1905–இல் மேனாடுசென்ற இக்பால்,கேம்ப்ரிஜ் டிரினிடி கல்லூரியில் பி.எச்.டி. பட்டம் பெற்றார். மியூனிக் பல்கலைக் கழகமும் டாக்டர் ஆப் ஃபிலாசபி என்னும் சிறப்பை அளித்தது. இலண்டனில் தங்கியிருக்கையில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார். இலண்டன் பல்கலைக் கழகத்தில்அரபி மொழிப் பேராசிரியராக இக்பால் பணியாற்றினார். அரபி, பஞ்சாபி, உர்தூ, பாரசீகம், சம்ஸ்கிருதம் ஆகிய கீழ்த்திசை மொழிகளை அறிந்த இக்பால், ஜெர்மன், இலத்தின் ஆகிய மொழிகளைக் அங்குக் கற்றார். மூன்றாண்டுகள் வெளிநாட்டில் தங்கி விட்டு 1908-ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு இக்பால் திரும்பி வந்தார்.

மேலை நாகரிகத்தின் நிலைமைகளைக் கண்டறிந்த இக்பால் இந்தியா திரும்பியதும் இங்கு நிலவும் சூழ்நிலையைக் கண்டு மனம் வெதும்பினார்.

கீழ்த்திசை நாடுகள் இறைவனைக் கண்டன;
ஆனால் இவ்வுலக நன்மைகளைக்
காணத் தவறிவிட்டன;
மேலை நாடுகளோ இவ்வுலகப்
பயன்களில் ஆழ்ந்து
இறைவனையே மறந்துவிட்டன''

என்று பாடிய இக்பால் நாட்டு நடப்புகளைக் கண்டு துயருற்றார். 'நீ விழித்து எழுவதற்காக நான் அழுகின்றேன்' என்று சோக கீதம் இசைத்தார் அவர். அடிமைத் தளையில் பிணைப்புண்டு, அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நாட்டை நினைத்து, இக்பால் இதயம் கவிதையைப் பொழிந்தது.

''எழுமின்! கீழ்த்திசையின்
தொடுவானத்தில்
இருள் சூழ்ந்திருக்கிறது ;
கனல் தெறிக்கும்
நம் குரலால்
உறங்கும் சபையில்
ஒளியேற்றுவோம்''

என்று விடுதலைக் கீதம் பாடினார் மகாகவி இக்பால். வாழ்விற்கு வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். ஆனால், அத் தொழிலில் அவர் காட்டிய நேர்மையைப் பார்த்து உலகமே வியந்தது.

அடிமைத்தனத்தை அடியோடு வெறுத்தவர் அல்லாமா இக்பால்– 'அடிமைத்தனத்தில் கலைகளை இழக்கின்றோம் ; சமயத்தை இழக்கிறோம் ; அறிவையே இழந்து விடுகிறோம்' என்று அவர் கருதினார். 'அடிமை உடலில் உயிர் நிலைப்பதற் காக உள்ளத்தையே விற்று விடுகிறான்' என்று வேதனைப்

படுகின்றார் அவர். எனினும் 'கீழ்த்திசை எழுச்சி பெறும் காலம் வந்துவிட்டதை' உணர்ந்து, 'கீழ்த்திசையின் மடியில் புதிய கதிரவன் உதித்து விட்டான்' என்று போர்ப்பரணியும் பாடுகின்றார்.

இக்பால் சமயப் பற்று மிக்கவர்; ஒரே இறைவன் என்னும் ஏகத்துவத்தில் ஆழ்ந்த 'நம்பிக்கையுள்ளவர்: தாய்மையில் உள்ளத்தைப் பறிகொடுத்தவர்; சிறப்பாக, மானுடம் பேணும் மாண்புடையவர்.

"மனிதப் பண்பு எது?
மனிதனை மதிப்பதே;
இனியேனும்
மனிதனின் மதிப்பைப் போற்று"

என்று மானுடம் பாடிய வானம்பாடி கவிஞர் இக்பால். இதனால்தான் 'என் இதயக் குருதி என் கவிதைகளில் நிரம்பி வழிகிறது' என்று அவர். பாடியுள்ளார்.

சமரசத் தென்றலில் திளைத்த கவிமலர் இக்பால். இந்து மதத்திடம் மதிப்பு வைத்திருந்தவர் அவர். அவர் என்றும் வெறுப்பை விதைத்ததில்லை.

"நான் கோயிலை மதிக்கிறேன்;
கஃபாவின் முன் பணிகிறேன்;
பூணூல் உண்டு என் மார்பில்;
கையிலோ ஜெபமாலை"

என்று அவர் கவிதை ஒன்று பேசுவது, அவர் கொண்டிருந்த சமரசப் போக்கிற்கு எடுத்துக் காட்டாக இன்னும் விளங்குவதைப் பார்க்கலாம். 'மதம் ஒருவர்க்கு

ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளப் போதிக்கவில்லை என்று அன்றே அவர் வலியுறுத்தினர். அன்பே வாழ்வின் உயிர்நாடி ! வள்ளுவப் பெருந்தகையும் 'அன்பின் வழியது உயிர்நிலை' என்ருர், அக் கருத்தைத் தழுவியது போலவே இக்பாலின் இதய வீணையில் அன்புப் பாடல் ஒன்று எழுந்தது.

''இவ்வுலகில்
புதியதோர் தேவாலயத்தை,
அன்புக் கோயிலை,
ஒருவர்க்கு ஒருவர்
நேசங்கொள்ளச் செய்யும்
ஆலயத்தை எழுப்புவோம்'' என்று அந்தப் பாடல் ஒலித்தது.

பாட்டாளிகளிடம் பரிவு மிகக் கொண்டவர் இக்பால். அந்தப் பரிவைப் பல கவிதைகள் காட்டுகின்றன.

''உழைத்துப் பெருத எதுவும்
மனிதனின்
உடைமை அல்ல'' என்பது அவர் கொள்கை. ''உழைப்பின் பயன்களை எல்லாம் முதலாளிகள் உண்டு கொழுப்பதேன்? '' என்று வினு எழுப்பியவர் இக்பால்.

''தொழிலாளியின்
துயர்கள் எல்லையற்றவை;
முதலாளித்துவக் கப்பல்
அழிவதென்று? '' என்பதாக முதலாளி-தொழிலாளி பிரச்னை பேசி, பொதுவுடைமைக் கருத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்ருர் அல்லாமா இக்பால்.

"பேருவின் எடையைத் தவிர
வேறொன்றையும்
தூக்கி அறியாத
அறிஞனின் கைகளை விட,
ரம்பத்தால்
அறுத்து அறுத்து
கரடு முரடான
தச்சனின் கைகள்
என் கண்களுக்கும்
கவர்ச்சியால் இருக்கின்றன ;
பயனுள்ளவையாய்த் தெரிகின்றன" என்று

உழைப்பின் உயர்வை இக்பால் மேலும் உயர்வாகக் கவிதையாக்கி உள்ளார்.

அல்லாமா ஷேக் முஹம்மது இக்பால் 1928–ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் சென்னை நகருக்கு வருகை தந்தார். சென்னை நகரில் ஆறு சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அப் பொழிவுகள் நூலாக வெளிவந்தன. 'The reconstruction of religious thought in Islam' என்பது அப் புத்தகத்தின் பெயர்.

உர்து மொழியில் 'பாங்கே–தரா', 'பாலே ஜிப்ரில்', 'ஸர்வே–கலீம்' போன்ற கவிதை நூல்களை எழுதியுள்ளார் இக்பால். 'பயாமே–மஷ்ரிக்', 'ஸபூரே–அஃஜம்', 'ஜாவீத் நாமா' போன்றவை இக்பாலின் பாரசீகக் கவிதைகள் அடங்கிய நூல்கள். அல்லாமா இக்பாலின் கவிதைகளை உலகெங்கும் உள்ள அறிஞர்கள், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள்–ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் தத்தம் நாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்து போற்றி வருகின்றனர்.

இக்பால் வாழ்க்கை பற்றிக் கொண்டிருந்த எண்ணம் மகத்தானது. அவர் கவிதையில்தொட்ட இடமெல்லாம் அவ்வெண்ணம் துளிர்விட்டு நிற்கின்றது. மனிதன் உழைப்பின்றி முன்னேற முடியாது; உழைப்பே உயர்வு என்று அவர் எண்ணினார். "யாரும் தன் விதியைத் தானே மாற்றிக் கொண்டாலன்றி, இறைவன் அவருடைய விதியை மாற்ற மாட்டான்" என்ற தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் இக்பால். எனவேதான்.

"வாழ்க்கை உடையை
எவ்வளவு காலம்
கந்தலாய் வைத்திருப்பாய்;
எவ்வளவு நாள்கள்
எறும்புகளாய்
ஊர்ந்து திரிவாய்
உலகில்;
எழு!
இறக்கைகளை விரித்துப்
பற!
ராஜாளியாக
மாறக் கற்றுக்கொள்"

என்று 'கீழ்நாட்டுச் செய்தி' என்னும் நூலில் இக்பால் கூறியிருக்கும் அறிவுரை மனித முயற்சிக்கு அவர் கொடுத்த மதிப்பைக் காட்டுகின்றது.

அலெக்ஸாண்டர் ஜாம் புகழை
அடுக்கடுக்காய்ச் சொல்லுகின்ற

கனவென மயக்கம் ஊட்டும்
கதைகளைக் கேட்டது போதும்!
மக்களின் எழுச்சிப் பாடல்
மகிழ்ச்சி வெள்ளம் கொட்டும்!
பூமியின் கருப்பை நீங்கிப்
புதியதோர் கதிரோன் வந்தான்!
மறைந்திடும் மீன்களுக்காய்
மனத்தினில் கரைவதேனோ?
தளைகளை, சங்கிலியைத்
தகர்த்தது மனிதப் பண்பு!
இழந்திட்ட சொர்க்கம் வேண்டி
எத்தனை நாள் அழுவான் ஆதம்''

என்று பாடி ரஷ்யப் புரட்சியை வாழ்த்தினார் கவிஞர் இக்பால். 'உன் ஆத்மாவின் உள்ளே ஒரு பொருளைக் கண்டுணர்' என்று உரைத்தவர் இக்பால்.

''முன்னர்த் தோன்றும்
இருளை அகற்றிக்
கிழக்கில் தோன்றும்
சூரியனைப் போல்
எழு''

என்று கீதம் இசைத்த வானம்பாடி, 1938–ஆம் ஆண்டு ஏப்ரல் 21–ஆம் நாள் மறைந்து விட்டது.

அந்த வானம்பாடியைப் பற்றிப் பேராசிரியர் வாடியா கூறியது இங்கே நினைக்கத் தகுந்த ஒன்றாகும், இக்பால் 'இஸ்லாமியர்

என்று முஸ்லிம்கள் பெருமைப்படலாம்; அவர்களைவிட அவர் இந்தியர் என்று நாம் அனைவரும் பெருமிதம் கொள்கின்றோம். ஒரு மதத்திற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ உரியவர் அல்லர் அவர். அனைவர்க்கும் உறவானவர் அல்லாமா இக்பால்' என்பது வாடியாவின் வாசகம். அந்த வானம்பாடி மறைந்தாலும், அதன் இதய கீதங்கள் இன்னும் நாடெங்கும் எதிரொளிக்கின்றன.

★